# டில்லிடாக்டர்கள் வேலைநிறுத்தம் சட்டவிரோதம்: பாரதஅரசு நடவடிக்கை

Riegstered as a News paper in Ceylon விலைசதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 11
இதழ்: 60
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 29 முஹறம் 23 வெள்ளிக்கிழமை 11-4-69




பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

புதுடில்லி, ஏப்ரல் 10

புதுடில்லியில் ஏழு பெரிய ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் நடத்திவரும் வேலைநிறுத்தத்தை சட்டவிரோதமென இந்திய அரசு அறிவித்திருக்கின்றது.

இரு டாக்டர்கள் முறைகேடாக நடந்துகொண்டார்கள் என்று வேலைநீக்கம் செய்யப்பட்டதைத்தொடர்ந்து புதுடில்லியிலுள்ள ஏழு ஆஸ்பத்திரிகளின் டாக்டர்கள்வேலைநிறுத்தத்தில் இறங்கினர்கள். இந்த டாக்டர்களின் வேலைநிறுத்தம் சட்டவிரோதம்என்று அறிவிக்கும் அறிவித்தல்களை மத்திய அமைச்சர் திரு. கே. கே. ஷா, லோக்சபையில் தாக்கல் செய்தார்.

1968 ம் ஆண்டு அத்தியாவசியசேவைகள் பிரகடன சட்டத்தின் பிரகாரம் இந்த அறிவித்தல்தாக்கலசெய்யப்பட்டது.

டாக்டர்களின் கோரிக்கைகள் சம்பந்தமாகஉடன்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், அவர்கள் உடனே வேலைக்குத் திரும்பவேண்டுமென்றும் திரு, ஷா கூறினர்.

## ஒரே சூலில் மூன்று குழந்தைகள்

புலோலி, வியாழன்

தும்பளையைச் சேர்ந்த சு. சிநாதன் தங்கநாகேஸ்வரி (வயது 29) இன்று அதிகாலை மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் மூன்று பெண் குழந்தைகளைப் பிரசவித்தார்.

தாயும் குழந்தைகளும் ஆஸ்பத்திரியில் சுகமே இருந்து வருகிறார்கள். மூன்று குழந்தைகளின் நிறைகள் ஒன்றின் நிறை 4 றாத்தல் இரண்டாவது குழந்தையின் நிறை நாலரை றாத்தல் மூன்றாவது குழந்தையின் நிறை 5 றாத்தல். இவரின் முதல் குழந்தைகள் இவைகளேயாகும்.

......

## "பிரதமர் வாக்குறுதியை கைவிட்டு விட்டார்"

யாழ்ப்பாணம். வெள்ளி

'தமிழரசுக்கட்சியின் பத்தாவது மாநில மகாநாட்டில் பிரதமர் கலந்துகொண்டு அளித்த வாக்குறுதிகள் பலவற்றைக் கைவிட்டார். அதனால் அவர் மீது நம்பிக்கை இழந்துவிட்டோம்' என்று தமிழரசுக் கட்சி மகாநாட்டில், அரசியல் ஆலோசனைக் கூட்டத்தில் தமிழரசுக்கட்சிபொதுச்செயலாளர் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 23, 24, 25-ம் திகதிகளில் கல்முனையில் நடைபெற்ற கட்சியின் 10-வது மாநில மாநாட்டின் பின் தமிழ்ப் பேசும் மக்களேயும் கட்சியையும் பொறுத்த வரையில் இந்நாட்டின் அரசியல் சம்பவங்களை ஆராய்வதே இவ்வறிக்கையின் நோக்கமாகும்.

தமிழ் அரசாங்க ஊழியர்கள் விடயத்தில் முந்திய அரசாங்கத்தின் கெடுபிடிகளைத் தளர்த்தியும் தமிழ் மொழி உபயோகம் பற்றிய சட்ட விதிகளை நிறைவேற்றியும் அரசாங்கம் எமக்களித்த வாக்குறுதிகளில் சிலவற்றை நிறைவேற்றிய சூழ்நிலையில் மாவட்டசபை மசோதா விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்ற நம்பிக்கையோடு பத்தாவதுமாநில மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் இவ்வுறுதி மொழிகள் நிச்சயம் காப்பாற்றப்படுமென்று ஆணித்தரமாகப் பேசினர்.

ஆனல் சென்ற மாநாட்டின்பின் தமிழ் உபயோகம் பற்றிய சட்டவிதிகளை உள்ளடக்கிய அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைத்

இந்த ஓராண்டில் எமக்களித்த வாக்குறுதி எதுவும் நிறைவேற்றப்படுமென்ற நம்பிக்கை சிறிதும் இல்லை.'

(கா. நி.)

......

## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

புங்குடுதீவு கிழக்கு கலட்டி ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் ஆம்மாசம் 20-ம்திகதி திங்கட்கிழமை நடைபெற இருக்கிறது. அதன்பின் 6 நாட்கள் கிரியா கால விளக்கம் நடைபெறும்.

## 20 ஆண்டு சேவையின் பின் திரும்பினர்

மன்னர், வியாழன்

இலங்கையிலுள்ள இந்திய தூதுவராலயத்தில் பலஆண்டுகளாக கடமையாற்றிய வரும் தலைமன்னரில் கப்பல் சேவை சட்டவிரோத தடுப்புமுகாம் இவைகளுக்கு பொறுப்பாயிருந்து கடந்த 20 ஆண்டுகளாக கடமையாற்றிய திரு. பி. எஸ். எம். வேணுகோபால் மேனன் ஓய்வுபெற்று தனதுதாயகத்திற்கு காலை இர்வின் கப்பல் மூலம் புறப்பட்டுச் சென்றார்.

# 'வட; கிழக்கில் சம அந்தஸ்து சட்ட ரூபமாககிடைத்துள்ளது'

## தமிழரசுக் கட்சியின் சாதனைபற்றி அமிர்தலிங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"இந்தியாவில் சுதந்திரத்திற்காக போராடி வந்த தேசிய காங்கிரஸ், சில கட்டத்தில் மந்திரி சபையையும் அமைத்தார்கள். சென்னையில் ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் மந்திரி சபை பதவி ஏற்றது. இதே போல் வேறு சில இடங்களிலும் காங்கிரஸ் மந்திரிசபை அமைத்தது. 39-ம் ஆண்டு போர் தொடங்கிய நேரத்தில், வெள்ளையர்கள் போர் பிரகடனம் செய்ததை எதிர்த்து, காங்கிரஸார் பதவிகளை உதறித் தள்ளிவிட்டு மீண்டும் சுதந்திரப் போராட்டத்தில் குதித்தார்கள். இதே போல் உரிமைக்காகப் போராடி வந்த தமிழரசு கட்சியும், தேசிய அரசாங்கத்தில் மந்திரி பதவியை

தலிங்கம் பேசும் போது கூறினர்.

திரு. ஏ. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

"கடந்த 4 ஆண்டுகள் கட்டுப்பட்டிருந்தோம். கட்டுண்டோம் பொறுத்திருந்தோம் காலம் மாறும் மாறும் என்று காத்திருந்தோம். 16 ஆண்டுகள் எதிர்க் கட்சியிலிருந்தோம். 65-ம் ஆண்டு ஆளும் கட்சியில் அங்கமாக அமையக் கூடிய நிலை ஏற்பட்டது. 16 ஆண்டுகள் எதிர்க்கட்சியிலிருந்து அரசாங்கத்தை முழுமூச்சாக எதிர்த்தோம். அடிபட்டோம். உதைபட்டோம். சிறைசென்றோம், தடுப்புக்காவலில் வதைக்கப் பட்டோம், கஷ்டப்பட்டோம். தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காக பலர் உயிர்களைக் கூட தியாகம்செய்தார்கள்.

யில் நான்கு ஆண்டுகள் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தோம். எத்தனையோ தடவை எமது இனத்திற்கு இன்னல் நேர்ந்த போதெல்லாம், கட்சி மன்றக்குழுக் கூட்டத்தில் எதிர்த்துவாதாடினோம், போராடினேம். வெளியிலமௌனம்சாதித்து வந்தோம்.

நான்கு ஆண்டுகள் நாங்கள் என்ன செய்தோம் என்று இன்று பலர் கேட்கிறார்கள். ஏன் வெளியேறவில்லை? என்று கடந்த 4 ஆண்டுகளாக கேட்டார்கள். இன்று ஏன் வெளியேறினீர்கள்? என்று கூட சிலர் கேட்கிறார்கள். இதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருப்பதில் காலத்தை கடத்தாது நாம் நமது போராட்டத்தை தொடங்க வேண்டும்

தமிழ் மொழி உபயோக சட்டவிதிகள் சட்டபூர்வ

பட வேண்டும் என திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாக நாம் இது போன்ற இன்னும் சில உரிமைகளை அரசாங்கத்திடமிருந்து பெற்றிருக்கிறோம்.

### ஏன் வெளியேறுமல் இருந்தோம்

மாவட்டசபை இல்லை என்று தெரிந்ததும் ஏன் அரசாங்கத்திலிருந்து வெளியேறவில்லை என்று சிலர் கேட்கின்றார்கள். அதன் பின்பும், நாம் பிரதமருடன் செய்த ஒப்பந்தத்தில் சிலவற்றை அமுல் செய்யலாம் என்ற நம்பிக்கையில் தான் வெளியேறவில்லை.

தமிழ் பல்கலைக் கழகம் வேண்டுமென்றும் பிரதமரிடம் கேட்டோம். தமிழ் காங்கிரஸ் கட்சியினர் இந்துப் பல்கலைக்கழகம் கேட்கின்ற நிலையில் எப்படி இரு பல்கலைக்கழகம் வழங்க முடியும் என்று பிரதமர் கூறினர். மாவட்டசபை இல்லை என்று தெரிந்த பின்னர் பிரதமர் திருமலையில் ஒரு பொதுப் பல்கலைக்கழகம்

மற்றும் கட்சித் தலைவர்களும் ஆதரித்தனர். மாவட்டசபை வரவேண்டும் என்பது தான் எங்கள் ஒரே ஒரு நோக்கம். அதனுல் அவர் கூறிய கிருத்தத்தை ஏற்றுக் கொண்டோம். அதன் பின்பும், மாவட்ட சபை மசோதாவில், பல திருத்தங்களை தமிழ் காங்கிரஸ் தலைவர் கொண்டுவந்து, மாவட்ட சபைகளின் அதிகாரங்களை குறைத்துக் கொண்டு வந்தார். எல்லாத் திருத்தங்களுக்கும் நாம் சம்மதித்தோம். அதிகாரங்கள் குறைந்த மாவட்ட சபைகளைக் கூட நாம் அந்த நேரத்தில் ஏற்றுக்கொள்ள தயாராக இருந்தோம். ஏனெனில் மாவட்ட சபைகள் ஒருதடவை நிறுவப்பட்ட பின்னர் படிப்படியாக அதிகாரங்களை மீண்டும் கூட்டலாம் என நாம் கருதினேம். மாவட்டசபை மசோதாவிற்கான எதிர்ப்பு நாட்டில் அதிகரிக்கவே, பிரதமர் மாவட்டசபைகள் நிறுவும் எண்ணத்தைக்கைவிட்டார்.

தமிழ் மொழியை அழித்துவரும் சிங்கள கட்சிகள் தமிழரின் கலை, கலாச்சார

## பாரதபிரதமர் ஆந்திரா முதல் மந்திரியை சந்தித்தார்

புதுடில்லி, ஏப். 10

தெலுங்கானு தபால்நிலையமொன்றின் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் ஒருவர் பலியானார். தெலுங்கானு ஆதரவாளர்களின் சத்தியாக்கிரகம் தெலுங்கானு 5 ஜில்லாக்களிலும் நடைபெறுவதாக அறிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க ஆந்திரப்பிரதேச பிரச்னை சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி எதிர்க்கட்சித் தலைவர்களுடனும், ராஜ்ய அமைச்சர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தினர். தெலுங்கானு பிரச்னையை ஒற்றுமையான முறையில் தீர்த்துவைக்கவே தாம்விரும்புவதாக பாரதப் பிரதமர் தெரிவித்தார். உள்துறை அமைச்சர் திரு. சவானும், பார்லிமெண்டரி விவசாய அமைச்சரும் இதில் கலந்துகொண்டனர்.

ஆந்திரா நிலைமைசம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் திருமதி இந்திரா காந்தி, மந்திய அரசு தலைவர்களுடனும், ஆந்திராப் பிரதேச முதல் அமைச்சருடனும் நாளை பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார்.

## காணிக்குள்புகுந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஸார் பதவிகளை உதறித் தள்ளிவிட்டு மீண்டும் சுதந்திரப் போராட்டத்தில் குதித்தார்கள். இதே போல் உரிமைக்காகப் போராடி வந்த தமிழரசு கட்சியும், தேசிய அரசாங்கத்தில் மந்திரி பதவியை ஏற்று உரிமைகள் கிடைக்கவில்லையென்று தெரிந்ததும், மீண்டும போராட்டத்தில் குதித்துள்ளது''

கோட்டை முற்றவெளி மைதானத்தில் நேற்றுமுன்தினமிரவு நடந்த தமிழரசு கட்சிப் பொதுக் கூட்டத்தில், தமிழரசு கட்சிபொது செயலாளர் திரு. ஏ. அமிர்

முழுமூச்சாக எதிர்த்தோம். அடிபட்டோம். உதைபட்டோம். சிறைசென்றோம், தடுப்புக்காவலில் வதைக்கப்பட்டோம், கஷ்டப்பட்டோம். தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காக பலர் உயிர்களைக் கூட தியாகம்செய்தார்கள். மீண்டும் நாம் பழைய நிலைக்குவந்துவிட்டோம். போராட்டத்திற்கு தயாராகுங்கள். அழைப்பு வரும் போது அணியணியாக வாருங்கள்.

### ஆனாலும் மௌனம் சாதித்தோம்

சில உரிமைகளைப் பெற்றுவிடலாம்என்ற நம்பிக்கை

றினீர்கள்? என்று கூட சிலர் கேட்கிறார்கள். இதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருப்பதில் காலத்தை கடத்தாது நாம் நமது போராட்டத்தை தொடங்க வேண்டும்

தமிழ் மொழி உபயோக சட்டவிதிகள் சட்டபூர்வமான அந்தஸ்து பெற்றுள்ளது. திறைசேரி சுற்றறிக்கை மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களத்துடன் தமிழுக்கும் சட்டபூர்வமாக சம அந்தஸ்து கிடைத்துள்ளது வடக்கு கிழக்கில் எந்த விஷயமும், தமிழ் மொழியிலும் வெளியிடப்

காங்கிரஸ் கட்சியினர் இந்துப் பல்கலைக்கழகம் கேட்கின்ற நிலையில் எப்படி இரு பல்கலைக்கழகம் வழங்க முடியும் என்று பிரதமர் கூறினார். மாவட்டசபை இல்லை என்று தெரிந்த பின்னர், பிரதமர் திருமலையில் ஒரு பொதுப் பல்கலைக்கழகம் நிறுவித் தருவதாக வாக்குறுதியளித்தார். ஆனல் அதுகூட இன்று நடைபெறவில்லை. இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் நாம் நம்பி ஏமாந்தோம். எங்கள் தொகுதி அபிவிருத்தியில் கூட அரசாங்கம் அக்கறை காட்டவில்லை.

### மாவட்டசபை

மாவட்டசபை கிடைத்திருந்தால் தமிழர் ஓரளவாவது தங்கள் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். தெற்கில் எதிர்க்கட்சியினரும், வடக்கில் தமிழ் காங்கிரஸும் பலத்த எதிர்ப்புக் காட்டியதால் பிரதமர் மாவட்டசபையையும் கைவிட்டார்.

தேசிய அரசாங்கத்திலுள்ள கட்சித் தலைவர்கள், பிரதமர் தலைமையில் மாவட்டசபை மசோதாவை ஆராய்தனர். மக்கள் பிரதிநிதியே மாவட்டசபை தலைவராக இருக்க வேண்டும் என்று நாங்கள் கூறியதை பிரதமரே ஏற்றிருந்தார். தமிழ் காங்கிரஸ் தலைவர் மாவட்டசபை தலைவராக, மக்கள் பிரதிநிதி இருக்கக் கூடாதென்றும், அரசாங்க அதிபரே மாவட்டசபை தலைவராக இருக்க வேண்டும் என்று ஒரு திருத்தத்தை கொண்டு வந்தார். இதனை

லாம் என நாம் கருதினேம். மாவட்டசபை மசோதாவிற்கான எதிர்ப்பு நாட்டில் அதிகரிக்கவே, பிரதமர் மாவட்டசபைகள் நிறுவும் எண்ணத்தைக்கைவிட்டார்.

தமிழ் மொழியை அழித்துவரும் சிங்கள கட்சிகள் தமிழரின் கலை, கலாச்சாரத்தை அழிக்கத் திட்டம்தீட்டியுள்ளனர். சினிமா கலை நவீன சாதனம் என்பதை உலகமே இன்று ஏற்றுள்ளது. தமிழ்ப்படங்களில் 3 பிரதிகளே எடுக்கலாம் என அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. இதனல் இந்நாட்டில் எத்தனையோ படமாளிகைகளில் தமிழ்ப்படங்கள் ஓடமுடியாத நிலைமை ஏற்படும் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள படமாளிகைகளில், சிங்களப்படங்களைத் திரையிடுவார்கள் இந்த நிலை நீடித்துக்கொண்டிருந்தால், இன்னும் சில ஆண்டுகளில் இந்நாட்டில் வாழும் தமிழர் ஒரு புதிய இனமாக புதிய மொழி பேசுபவர்களாக மாறுவார்கள். இதற்காகவே அரசாங்கம்திட்டம் தீட்டி வருகிறது. இதனை நாம் முழுமூச்சாக எதிர்க்க வேண்டும்.

கொண்டு உரையாற்றிய பிரதமர் இவ்வுறுதி மொழிகள் நிச்சயம் காப்பாற்றப் படுமென்று ஆணித்தரமாகப் பேசினர்.

ஆனல் சென்ற மாநாட்டின்பின் தமிழ் உபயோகம் பற்றிய சட்டவிதிகளை உள்ளடக்கிய அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைத் தெளிவுபடுத்தும் திறைசேரி சுற்றறிக்கை மூன்று ஆண்டுகள் கழித்து எமது பலமான வற்புறுத்தலின்பின் சென்ற மாதம் வெளியிடப்பட்டதைத் தவிர எமக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் எதுவும் நிறைவேற்றப்படாத சூழ்நிலையில் இப்பதினேராவது மாநில மாநாடு நடைபெறுகின்றது. இப்பாராளுமன்றம் தன் முழுக்காலத்திற்கும் கலைக்கப்படாமல் இருந்தாலும் இவ்வரசாங்கத்திற்கு எஞ்சியிருப்பது இன்னும் ஓராண்டே

திரு, எஸ். இராசதுரை திரு. வீ. ஏ. அழகக்கோன் திரு. எம். ஆலாலசுந்தரம் ஆகியோரும்மற்றும் பலரும் பேசினர்.

ஊர்வலம் இரவு 10 மணிக்கு முற்றவெளியை வந்தடைந்தது.

பந்தமான பேச்சுவார்த்தைகளில் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி எதிர்க்கட்சித் தலைவர்களுடனும், ராஜ்ய அமைச்சர்களுடனும் பேச்சுவார்த்தை

காந்தி, மத்திய அரசு தலைவர்களுடனும், ஆந்திராப் பிரதேச முதல் அமைச்சருடனும் நாளை பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார்.

# பிரதமரை எதிர்த்தும் தமிழரசு வாக்களிக்கும்

## அமிர்தலிங்கம் அறிவிப்பு

— நமது அலுவலக நிருபர் 'யோகி' —

யாழ்ப்பாணம், வியாழன்

''ஆட்சிமன்றத்தில் கல்வி மந்திரிக்கு எதிராக மட்டுமல்ல, பிரதம மந்திரிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தாலும் ஆதரவு அளித்து வாக்களிப்போம்'' என்று தடிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் வட்டுக்கோட்டை. எம். பி. யுமான திரு. அமிர்தலிங்கம் நேற்று நள்ளிரவு பகிரங்கமாக அறிவித்தார்.

யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் பொதுக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்

கூட்ட ஆரம்பத்திலேயே அடுதத போராட்டத்துக்கு கட்டியம் கூறுவது போல 11 அதிர்ச்சிவெடிகள் ஆகாயத்தில் வெடிந்நுந் தீர்க்கப்பட்டன.

தமிழரசுக்கட்சிப் புதிய தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தமது தலைமையுரையில் அடுத்த போராட்டத்தைப் பிரகடனம்செய்ததோடு, தியாகம்செய்ய ஒவ்வொரு தமிழரும் முன்வரவேண்டுமென அறைகூவல் விடுத்தார்.

# 'சேர்ந்து உரிமை பெறலாம் என்பது கனவாகிவிட்டது'

## பண்டிதர் இரத்தினம் கூறுகிறர்

யாயாழ்ப்பாணம், வியா.

'சிங்கள ஆட்சியாளருடன் சேர்ந்து தமிழர்கள் உரிமையைப் பெறலாம் என்ற எண்ணம் கனவாகப் போய்விட்டது, கடந்த நான்கு வருடகாலமாக அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைத்து உரிமைபெறலாம் என்ற நம்பிக்கையுடனிருந்தோம். இப்போது நல்ல பாடம் படித்துவிட்டோம்'' என்று கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் இலக்கிய மகாநாட்டுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

உடுவில் தமிழரசு மகாநாட்டில் விபுலானந்தர் அரங்கில் நடைபெற்ற இந்த இலக்கிய மகாநாட்டில் பண்டிதர் இரத்தினம் தொடர்ந்துபேசுகையில் குறிப்பிட்டதாவது;-

''இலக்கியத்துக்கும் அரசியலுக்குமிடையிலநெருங்கிய தொடர்பு உண்டு. இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாகும். தமிழ் இலக்கியத்தில் வீரம் செறிந்த பாடல்கள் இருக்கின்றன.

ஆட்டுக்கு நன்ருகக் குழைபோட்டு வளர்த்துவிட்டு பின்னர் அதே ஆட்டை வெட்டுவது போன்ற கதை தான் நமது கதையும், தமிழரசுக் கட்சிமீது தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்களென்ற பிரச்சாரத்தில் உண்மையில்லை என்பதற்கு இங்கு திரண்டிருக்கும் மக்கள் வெள்ளம் சான்று பகரும்.

இரசிகமணி கனக. செந்திநாதன் பேசுகையில், 'அரசியல் வாதிகளால் மட்டும்தமிழை வளர்த்துவிடமுடியாது. ஈழத்தில் இலக்கிய வளர்ச்சியில் கடந்த சில வருடகாலத்தில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டுள்ளதைக் காணக் கூடியதாகவுள்ளது. கடந்த 15 வருட காலத்தில் 500 புத்தகங்கள் வெளிவந்துள்ளன. தமிழ் நாட்டிலிருந்து இங்கு நூலகள்வர அனுமதி இருப்பதுபோல, அங்குநமது நூல்கள் செல்வதற்கு உள்ள தடையை நீக்க நமது அரசியல் வாதிகள் முன்வரவேண்டும் என்ருர்..

மட்டக்களப்பு எம் பி. திரு. செ. இரரசதுரை திரு. புதுமைலோலன் எழுதிய 'தடுப்புக் காவலில் நாம்' என்ற நூலை வெளியிட்டு வைத்துப் பேசுகையில், '1961-ம் ஆண்டில் 2-வது தடவையாக ஆருயிரம் ராணுவ வீரர் மத்தியில், நாம் 64 பேர் அடைத்து வைக்கப்பட்டிருந்ததை இந்த நூல் அருமையாகச் சித்தரிக்கிறது' என்று குறிப்பிட்டார்.

''பாரதியார் தொடக்கம் பல தமிழ் நாட்டுக் கவிஞர்கள் இலங்கையைக் குறிப்பிடுகையில் 'சிங்களத்தீவு. என்று குறிப்பிட்டுள்ளனர்' இந்நிலையை ம. பொ. சி. போன்ற அறிஞர்கள் மாற்ற வேண்டும்'' என்றும் மட்டு நகர் எம், பி. கூறினர், நூல் முதற்பிரதியை உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் வாங்கினர்.

திரு. புதுமைலோலனும் பேசினர்.

அமரர் கந்தையா அரங்கில் கவிஞர் வி. கந்தவனம் தலைமையில், 'எங்கள் எதிர் காலம்' என்ற தலைப்பில் கவியரங்கம் இடம்பெற்றது,

கவிஞர்கள் காரை. செ. சுந்தரம்பிள்ளை, வி, குமாரசாமி, சுகு சண்முகநாதன், 'வன்னியூர்க்கவிராயர்' பண்டிதர் இராமச்சந்திரன் ஆகியோர் பங்குபற்றினர்.

இதனை அடுத்து அமரர் ஏகாம்பரம் அரங்கில், மட்டக்களப்பு எ.ம்பி. திரு. செ, இராசதுரை தலைமையில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. (கா.நி)

# காணிக்குள்புகுந்து சேதப்படுத்தியதாக வழக்கு

வல்வெட்டித்துறை, வியா.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சி. கணேசமூர்த்தி, செ. சின்னரத்தினம், எஸ். குலநாயகம் ஆகியோர் திருமதி ஆச்சிமுத்து சின்னத்தம்பி, சின்னையா சிதம்பரப்பிள்ளை ஆகியோருக்குச் சொந்தமான பொலிகண்டி இராமன்செம்பாடு என்னும் காணிக்குள் கடந்த வருடம் புரட்டாதி மாதம் 7-ந் திகதி அத்துமீறிப் பிரவேசித்து ரூபா 750 பெறுமதியான 65 வடலிகளை வெட்டி சேதப்படுத்தியதாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை பதில் மாஜிஸ்திரேட் திரு. கே. இரத்தினசிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணைக்கு எடுத்த போது வழக்கை விசாரணை செய்ய முன் பொலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்கமாஜிஸ்திரேட் 2-ம், 3-ம் எதிரிகளை விடுதலை செய்து முதலாம் எதிரிமீது வழக்கை விசாரணை செய்வதற்காக இம்மாதம் 23-ந் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்துள்ளார்.

எதிரிகள் சார்பில் திரு. கே. துரைரத்தினம், பருத்தித்துறை காரியாதிகாரி கந்தோர் விளையாட்டு அதிகாரி திரு. எஸ். கதிர்காமத்தம்பி, இன்பருட்டி கிராம முன்னேற்றச்சங்க நிர்வாகி திரு. என். சிவபாதம், மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. தாமோதரம்பிள்ளை ஆகியோர் சாட்சிகளாக அழைக்கப்பட்டிருந்தனர்.

# உடுவிலிலிருந்து இரண்டு மைல்நீள பிரமாண்டமான ஊர்வலம்

## அலங்கரித்த வீட்டில் தமிழரசு எம். பி க்கள் பவனி

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண நகரம் மட்டுமல்ல, இலங்கைத் தமிழ் மக்களே இதுவரை என்றும் கண்டிராத மிகப்பிரமாண்டமான, பெரிய, அலங்காரமான சுமார் இரண்டு மைல் நீளமான ஊர்வலம் நேற்று மாலை மருதனுமடம் சந்தியிலிருந்து ஆரம்பமாகி நேற்றிரவு யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தை வந்தடைந்தது.

தமிழரசுக்கட்சியின் 11-வது மாநில மகாநாட்டைமுன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த ஊர்வலத்தில் இலங்கையின் பல பகுதியிலிருந்தும் வந்த ஆயிரக்கணக்கான மக்கள் திரள்திரளாக அணிஅணியாக ஜனசமுத்திரமாகக் கலந்துகொண்டனர்.

எங்கும் மக்கள் கூட்டம்; வீதியெல்லாம் மூவர்ணக் கொடிகள். வீதியின் இரு மருங்கும் 6 மைல் நீளத்திற்கும் மாவிலை தோறணம் மாலைகளால் ஜோடிக்கப் பட்டிருந்தது,

புத்துயிர் பெற்றவர்கள் போல் வாலிபர்களும், பூரித்த வதனத்துடன் மங்கையர்களும் சாரிசாரியாக முன்னே அணிவகுத்துச் சென்ருர்கள். 'காந்திக் குல்லா' தலையிலும், மூவர்ணக்கொடிகள் கையிலும், மூவர்ணச்சால்வை தோளிலும் மூவர்ணக் கரை வேட்டியுமாக மக்கள் திரண்டு சென்றனர்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் முன்னே சைக்கிள் வீரர்கள். அதன் பின்னே அலங்கரிக்கப்பட்ட மாட்டுவண்டில்கள். அதன் பின்னே மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தலைமையில் மங்கையர் பவனி. அதை அடுத்து ஜோடிக்கப்பட்ட லொறிகளில் வாத்திய, இன்னிசை மெல்லிசைக் குழுக்களும், கிராமிய, இசை, நடன, நாட்டியக் குழுக்களும் இசைமுழக்கம் செய்துகொண்டிருந்தன. அலங்கரிக்கப்பட்ட கார்களின் பவனியின் முன்னே நாதஸ்வர தவில் வித்வான்கள்மங்களஇசை முழங்கிக்கொண்டு சென்றனர்.

மின்சாரத்தினல் அலங்கரிக்கப்பட்டு றைக்டரில் பொருத்தப்பட்ட வீடு ஒன்றில் திருவாளர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் எம்.பி,, அமிர்தலிங்கம் எம். பி., டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் எம். பி.' இராசமாணிக்கம் எம். பி. திரு,வி. ஏ. அழகக்கோன் எம்.பி., பண்டிதர் கா. பெ. இரத்தினம் எம். பி., ,தர்மலிங்கம் எம். பி., வி. என். நவரத்தினம் எம். பி. ஆகியோர் அமர்ந்திருந்தனர். தாவடிச் சந்தியிலிருந்து .இந்த வீடு ஊர்வலம் ஆரம்பமானது.

சிலம்படி, காவடி ஆட்டம், கரகஆட்டம், கண்டி நடனம், தமிழ்ஓசை முழக்கம் ஆகியன ஊர்வலத்தில் முக்கிய அம்சமாக இடம் பெற்றன.

தமிழகத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சிவிழா ஊர்வலத்தை நினைவூட்டும் வகையில், பண்டைத் தமிழர் வரலாற்றைச் சித்தரிக்கும் வகையில் இந்த கண்காட்சி ஊர்வலம் அமைந்திருந்தது. (கா. நி

## மா. பொ. சி

யாழ்ப்பாணம், வியாழன்

தமிழரசுக்கழகத் தலைவரும், தமிழக சட்டமன்ற உறுப்பினருமான சிலம்புச் செல்வர் மா. பொ. சிவஞான சிராகணியார் நேற்று காலை விமானத்தில் கொழும்பு சென்ருர்.

## எதிர்க்கட்சியில் ஆசனங்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

இம்மாதம் 26-ம்திகதி ஆட்சிமன்றம் கூடும் போது நாம் எதிர்க்கட்சியில் இருப்பதற்கு ஆசனங்கள் ஏற்பாடு செய்யும்படி சபாநாயகரைக் கேட்கப் போவதாக தமிழரசுப் பெதுச்யெலாளர் திரு. அமிர்தலிங்கம் நேற்றுக் குறிப்பிட்டார். (கா.நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்


## தேவை

சிப்பந்திகள்:

எமது ஸ்தாபனத்தில் கடமையாற்றுவதற்கு சிப்பந்திகள் தேவை. நற்குணமுடையவரும், ஒழுங்காகக் கடமையாற்றக் கூடியவர்களும் நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். கடை அனுபவமுள்ளவர்களும், யாழ்ப்பாணத்துக்கு சமீபத்தில் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி, 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 931

தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் (ஆங்கிலம், தமிழ் மொழிகள் மூலம் கற்பிக்க) உடனடி நியமனத்திற்கு. இரண்டாந்தர ஆரம்ப பயிற்சி பெற்ற ஜி. சீ. ஈ. உயர்தர (லண்டன் விரும்பத்தக்கது) அல்லது சங்கீதமும், நாட்டியமும். 26-4-69-க்கு முன் அதிபர், நவீல்ட் குருடர், செவிடர் பாடசாலை. கைதடி என்ற முகவரிக்கு தகைமை குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். 927

முகாமையாளர்;

பரந்தன் விஸ்வமடு படித்த வாலிபர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு முகாமையாளர் தேவை. ரூபா 2500/- ஆதனமும் ரூபா 1500- ரொக்கமும் பிணை கட்டக் கூடியவராக S. S. C. யுடன் கூட்டுறவுப் பயிற்சி பெற்றவராயும் (உழவு யந்திர சாரதி லைசென்ஸ் உடையவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்) இருத்தல்வேண்டும். வேதனம் ரூபா 125/- எல்லாமுட்பட. சேவையைப் பொறுத்துக் கூட்டப்படும். 20-4-69-க்கு முன் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். 1002

பங்காளர்

விவசாயக் கைத்தொழில் ஸ்தாபனத்திற்குப்பங்காளர் தேவை. ரூபா 5000/- முதலுக்கு மாதாந்த ஆதாயம் ரூபா 200/- வழங்கப்படும் விபரங்களுக்கு: கனிமனே. பூநகரி. 911

கற்பூரம் பக்கற்போடுவதற்கு பெண்பிள்ளைகள் தேவை. உடனே நேரில் மனுச்செய்க. அரஸ்கோ இன்டஸ்றீஸ், பருத்தித்துறை வீதி, நல்லூர். யாழ்ப்பாணம். 929

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவலர் வீதி 20 பரப்பு காணி, வீடு,

## விற்பனைக்கு

பூநகரி துரைச்சாமித் தோட்டத்தில் தென்னம் பொச்சு மட்டை தொகையாக விற்பனைக்குண்டு விபரங்களுக்கு P. தம்பு, வேலணை கிழக்கு, வேலணை அல்லது K. அருணாசலம், செம்மணி வீதி, நாயன்மார்காடு. 923

வண்ணார்பண்ணை, கன்னாதிட்டி ஒழுங்கையில் 10-ம் இலக்கத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற வீடுகளுடன் 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. T. தியாகராசாவுடன் தொடர்பு கொள்ளவும். 925

## வாடகைக்கு

வண்ணார் பண்ணைத் தபால்நிலையத்திற்கு அருகாமையில் நான்கு அறைகளைக் கொண்ட சகல வசதிகளுமுடைய வீடு வாடகைக்கு உண்டு. விரும்புவோர் தொடர்புகொள்க: 93/1, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம் 928

FOR SALE

Religion and Philosophy of the Gita by Swami Sharvananda - 2-nd Edition Price Rs. 3/- Available at the Sanmugananantha Book Depot Jaffna and other Book sellers. 924

ராஜா (யாழ்ப்பாணம்) 88வது தினம்!
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்கள் அரைக்கட்டணத்துடன் அனுமதிக்கப்படுவர்

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
ஆனந்தன் - ஹேமலதா நடித்த
விஜயபுரி வீரன்

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30க்கு மட்டும்
சிவாஜி — சரோஜாதேவி நடித்த
என் தம்பி

REGAL at JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
David Mccallum,
Stella Steven


# புதுவருட விளையாட்டு போட்டி

நெடுந்தீவு, வியாழன்

தமிழ்-சிங்கள புதுவருடத்தையொட்டி இம்மாதம் 14ந் திகதி நெடுந்தீவில் பெரும் விளையாட்டுப்போட்டி இடம் பெறவிருக்கிறது.

நெடுந்தீவு காரியாதிகாரி பிரிவில் காரியாதிகாரியும் விளையாட்டுத்துறை அதிகாரியும், நெடுந்தீவு பொலிசாரும் நடாத்தும் இப்போட்டியன்று முழுவதும் விளையாட்டு நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

நெடுந்தீவு மத்தியிலுள்ள விளையாட்டு மைதானத்தில் இடம் பெறும் இப்போட்டிகளில் சைக்கிள் ஓட்டம், கயிறிழுத்தல் போட்டி, கிறீஸ்கம்பம் ஏறுதல், அஞ்சல் ஓட்டங்கள் கவர்ச்சியான போட்டிகளாக இருக்கும்.

கழகங்களுக்கிடையேயான இப்போட்டிகளில் கலந்து கொள்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் நெடுந்தீவு விளையாட்டுத்துறை அதிகாரி திரு. என். எஸ். முருகேசுவால் கோரப்பட்டுள்ளன. இவற்றுக்கான பல பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றது.

## டயமண்ட் வென்றது

உடுப்பிட்டி, வியா.

கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்டுவரும் இரண்டாம் ஆண்டு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அல்வாய் மனோகரா முதற் பிரிவுக் கோஷ்டிக்கும், வதிரி டயமண்ட் இரண்டாம் பிரிவுக் கோஷ்டிக்குமிடையே. கடும் மோதல் ஏற்பட்டது.

ஆரம்பம் முதல் போட்டி சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது. இருகோஷ்டியும் பலம் வாய்ந்த கழகங்களான படியினால் இப்போட்டி பார்வையாளர்களுக்கு ஒரு விருந்தாக அமைந்தது. போட்டி ஆரம்பமான சிறிது நேரத்தில் வதிரி முன்னணி வீரர் சரத்சந்திரன் முதலாவது கோலை மிகவும் சாதுரியமாக அல்வாய் கோஷ்டியின் வலைக்குள் தள்ளினார்.

இதனையடுத்து மனோகரா கோஷ்டியினர் சுறுசுறுப்பாக ஆடத் தொடங்கினர் ஆனால் மனோகரா கோஷ்டியினர் எவ்வளவு தீவிரம்

## இரு சாம்பியன் கோஷ்டி மோதும்

உடுப்பிட்டி, வியாழன்

கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்டுவரும் வேலுப்பிள்ளை ஞாபகார்த்த வெற்றிக்கேடயம், சிவா அன்பளிப்பு வெற்றிக் கேடயம் ஆகியவற்றிற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிநாள் பரிசளிப்பு விழாவும் சாம்பியன் மோதலும் எதிர்வரும் 16ம் திகதி நடைபெறவிருக்கின்றது.

அன்றையதினம் நடைபெறும் சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் வவனியா ஜெட்லைன்ஸ் கோஷ்டி கலந்து கொளளும். வவனியா காரியாதிகாரி பிரிவு உதைபந்தாட்டச் சாம்பியன் கோஷ்டியான வவனியா ஜெட்லைன்சுடன் உடுப்பிட்டிக் காரியாதிகாரி பிரிவு சாம்பியன் கோஷ்டியான கரவெட்டி ஸ்பேஸ் கழகம் மோதலில் ஈடுபடும்.

இதுவரை நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு:-

வதிரி பொமேர்ஸ் கோஷ்டிக்கும் வதிரி டயமன்ட் பிரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்றமோதலில் பொமேர்ஸ் கோஷ்டி 5-3 கோல்களால்வென்றது

திரு. சி. சர்வேஸ்வரன் இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வெள்ளி 11—4—69**

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி **6-35 சைவநற்சிந்தனை, 6-40** இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 பண்ணாரிந்த தமிழ், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன் 61 மீ.

# 'உரிமைக்காக போராடும்போது சலுகைகளை எதிர்பார்க்கமுடியாது'

## தமிழரசு தலைவர் இராசமாணிக்கம் கூறுகிறார்

யாழ்ப்பாணம், வெள்ளி.

உரிமைக்காக போராடும்போது தமிழ் மக்கள் அரசாங்கத்திடமிருந்து சிறு சிறு சலுகைகளைஎதிர்பார்ப்பதை விட்டுவிட வேண்டும். அப்படி சலுகைகளை எதிர்த்தால் உரிமைப்போரில் முன்னேற முடியாது. ஆதலால் இன்று முதல் நீங்கள் உங்கள் ஆட்சிமன்ற உறுப்பினர்களிடம் சிறு சிறு சலுகைகளை பெற்றுத் தரும்படி கோருவதை நிறுத்திவிட வேண்டும். பொது விஷயங்களிலும் தொகுதி முன்னேற்றத்திலும் தாங்கள் அரசாங்கத்துடன் வாதாடுவோம். ஆனால் தனிப்பட்ட விஷயங்களில் இனிமேல் தலையிட முடியாது. ஆதலால் நீங்கள் எல்லாரும் உரிமைப்போருக்கு ஊக்கமளிக்க முன்வர வேண்டும்

யாழ்ப்பாணம் கோட்டை முற்றவெளி மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடந்த தமிழரசு கட்சி பகிரங்க பொதுக் கூட்டத்தில், தமிழரசு கட்சித் தலைவர் திரு. எம். எஸ். இராசமாணிக்கம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. இராசமாணிக்கம் தொடர்ந்து கூறியதாவது.

1916-ம் ஆண்டு முதல் 65 ம் ஆண்டுவரை ஆட்சிமன்றத்தில் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்துவந்தோம் 60-ம் ஆண்டு தேர்தலின் பின் திருமதி சிறிமாபண்டாரநாயக்கா இவ் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாகக் கூறினார். மறுபுறம் டட்லி சேனநாயக்கா நிபந்தனையின்றி எமது ஆதரவை தரவேண்டுமெனக் கூறினார். அந்நேரம் சிறிமாவுக்கு ஆதரவு வழங்கினோம். அதனால் டட்லியின் அரசாங்கம் 35 நாட்களில்வீழ்ந்தது. அந்நேரம் யூ. என். பிக்கு ஏன் ஆதரவு கொடுக்கவில்லையெனக் கட்சியில் பலர் கேட்டனர். அன்று நாம் செய்தது பிழையா? 65-ம் ஆண்டு யூ. என். பிக்கு ஆதரவளித்தோம் பிரதமர் டட்லியுடன்ஒப்பந்தம் செய்து ஒத்துழைப்பு வழங்கினோம். 4 ஆண்டுகள் நகர்ந்துவிட்டன. ஒப்பந்தத்தை

எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை. இதனால்தான் அரசாங்கத்திலிருந்து முற்றாக வெளியேறும் உரிமைக்காக போராடுவது என்று தீர்மானித்துள்ளோம்.

இந்த நாட்டில் ஒற்றையாட்சி இருக்கும்வரை எந்த ஆட்சி ஏற்பட்டாலும் அது சிங்கள ஆட்சியாகவே இருக்கும். இதனால் தமிழ் பேசும் மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

சமஷ்டி அரசியல் அமைப்பே சரித்திர, விஞ்ஞான அரசியல் ரீதியாக சிறுபான்மையினருக்கு நன்மையளிக்குமென்பதைத் திரு. செல்வநாயகம் 49-ம் ஆண்டேகூறியிருந்தார். இந்நாட்டில் எந்தக் சிங்களக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் பெரும்பான்மை பலம் பெற்றிருக்குமாதலால் தமது கோரிக்கை நிறைவேற்றக் கூடிய நிலையில் இருக்காது ஆதலால் ஒரே ஒரு வழி போராட்டம்தான் போராட்டம் மூலம் தான் நமது உரிமைகளை லட்சியத்தைப் பெற முடியும் எந்த இடத்தில் போராட்டத்தை விட்டோமோ மீண்டும் அதே இடத்திலிருந்து தொடங்குவோம். வீட்டுக்கொரு வாலிபர்கள் போராட்டத்தில் குதிக்க முன்வாருங்கள்.

இன்று முக்கியமானமுடிவிலிருந்து முற்றாக வெளியேறி எதிர்க்கட்சியோடு இருக்கத் தீர்மானித்துவிட்டோம். கூட்டாட்சிக் கட்சிகளோடு இரண்டாக கலக்கமாட்டோம். எதிர்க் கட்சியில் தனி இயக்கமாக தனிக் கொறடாவின் கீழ் இயங்குவோம்.

எதிர் காலத்தில் நீங்கள் பெரும் தியாகம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் அதற்கு தயாராகுங்கள். எதிகால அரசியல் பற்றி தீர்மானிக்கும்வரை எதிர்க் கட்சியில் இருந்து உரிமைக்காக பாடுபடுவோம். இன்று நாம் எடுத்த முடிவு சரியென்பதை நீங்கள் இங்கு வங்கக் கடலைபோல் திரண்டிருக்கும் காட்சி எடுத்துக் கூறுகிறது.

இந் நாட்டில் இனிமேலும் நாம் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ முடியாது' நாம் அரசாங்க சேவையை நம்பி வாழமுடியாது. சிங்கள மக்களுக்கு இந் நாட்டில் எப்படி உரிமை இருக்கிறதோ அதேபோல் நமக்கும் இருக்க வேண்டும் அந்த உரிமையைப் பெறுவதற்காக நாம் போராடித்தான் தீர வேண்டும்.

# யாழ். 'சலுசல'வுக்குள் பொலிஸார் திடீர்சோதனை

நல்லூர், வெள்ளி

யாழ்ப்பாணம் சலுசலாவுக்குள் திடீரென யாழ்ப்பாணம் பொலிசார் புகுந்து கொண்டனர் பொது மக்களுக்கு விற்பனை செய்யும் பொருட்களைப் பதுக்கிவைத்திருப்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்தே இவர்கள் இங்குபுகுந்து சோதனையிட்டனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு ஆர். சுந்தரலிங்கத்தின் தலைமையில் 10 இன்ஸ்பெக்டர்கள் இந்த சோதனையில் ஈடுபட்டனர்.

எவ்வித பொருட்களும் அகப்படவில்லை.

# வேறுபாடுகள் மறந்தாலே கலை வளரும்

யாழ்ப்பாணம், வெள்ளி

கோண்டாவில் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம் நடாத்திய நாடக விழா சென்ற 2-ம் திகதி மாலை புலவர் செ. து. தெட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

வேண்டும். விசை இருக்க வேண்டும், கதாநாயகனும் வில்லனும், நகைச்சுவை நடிகனும் கள்வனுக்கு நடிப்பவனும் இன்றைய நாடகங்களில் ஒரேமாதிரியே நடிக்கிறார்கள். இது திரைப்படத்தாலேற்பட்ட தாக்கம்தான்

## மூன்றாவது ஆண்டு விழா

முல்லைத்தீவு, வியாழன்

வட்டுவாகல் இளங்கதிர் சனசமூக நிலையத்தினர் தங்கள் 3-வது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட புதுவருட தினத்தன்று பிரமாண்டமான விளையாட்டுப் போட்டியை கரிக்கட்டு மூலை வடக்கு கிராமசபைத் தலைவர் திரு. க. குணலிங்கம் தலைமையில் நடாத்துகின்றனா. பிரதமவிருந்தினராக முல்லைத்தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. சொ. கணேசநாதன், முல்லைத்தீவு பட்டணசபைத் தலைவர் திரு. ம. சூ. வஸ்தியாம்பிள்ளை, திரு. அ. வெ, அருளப்பு ஆகியோர் கலந்துகொள்வர்.

12-ம் திகதி பிற்பகல் வட்டுவாகய் இளங்கதிர் சனசமூக நிலையக் கோஷ்டிக்கும் முல்லைத்தீவு ஐக்ய விளையாட்டுக் கழகக்கோஷ்டிக்குமிடையே கரபந்தாட்டப் போட்டி நடைபெறும். மத்தியஸ்தராக கரைதுறைப் பற்று விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு. என், தியாகராசா கடமையாற்றுவார்.

13-ம் திகதி காலை 6 மணிக்கு 20 மைல் சைக்கிள் ஓட்டமும், பிற்பகல் ஏனைய நிகழ்ச்சிகளும் நடைபெறும் ஈற்றில் பரிசுகள் திருமதி க. குணலிங்கத்தினால் வழங்கப்படும்.

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

சுன்னாகம் பொலிஸ் பகுதி புதுவருடக் கொண்டாட்டத்தில் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி விசேஷஅம்சமாக இடம்பெறுகிறது.

நாளை பிற்பகல் 2 மணி தொடக்கம் அளவெட்டி பிணுக்கை வெளியில் விசேட பாதுகாப்பு ஒழுங்குகளுடன் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நடைபெறும்.

புதுவருடத் தினத்தன்று காலை 8 மணிக்கு 50வயதுக்கு மேற்பட்டோ க்கு சைக்கிள் ஓட்டப் போட்டி நடைபெறும்.

கயிறு இழுத்தல் போட்டி இன்று மாலை நடைபெறுகிறது.

## நாத்திகம் ராமசாமிக்கு சிறை

சென்னை. ஏப். 10

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ப்பாணம். 929

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவலர் வீதி 20 பரப்பு காணி, வீடு, நன்னீர் கிணறு, செய்பயிர்களுடன் கண்டி வீதி, கச்சேரி, புங்கங்குளம் புகையிரத ஸ்தானம், கனகரட்ணம் மகாவித்தியாலயம் ஆகிய இடங்களுக்கு அண்மையில் விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். 184, கண்டி வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் தொடர்புகொள்ளவும். 922

2 காணிகள்:

சுண்டிக்குழி பழைய பூங்கா வீதியில் இரண்டு நிலப்பரப்புக் காணியும், ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் 20 பரப்பு தோட்டக் காணியும் 1/7, புதுரேட், கொய்யாத் தோட்டம் இல்லத்திற்கு விண்ணப்பிக்கவும். 926


REGAL at JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
David Mccallum, Stella Steven
in
THE SECRET FILE OF SOL MADRID
(Spy Film / Adults only)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya, PrePoya 10-30 A.M.
Kazgaras - Steward Granger
Gabriellalicudi
in
THE LAST SAFARI

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் - பாரதி
நடித்த
வாலிப விருந்து

புத்தாண்டு திரை விருந்து !!!
கிங்ஸ்லி-மைலன், (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன், (யாழ். நகர்)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மற்றும் ஸினிமாஸ் திரைகளில்







கலைப்பேரரசர் எம். ஜி. ஆர்.
ஆடலழகி ஜெயலலிதா
எம். ஆர். ராதா, நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடித்த
சரவணா பிலிம்ஸ்
சந்திரோதயம்
டைரக்ஷன்: கே. சங்கர்
கடைசி வாரம்!
கெப்பிட்டல் (கொழும்பு)
முத்துராமன், ராஜன், பாரதி, பானுமதி
நடித்த
பூவும் பொட்டும்


வலைக்குள் தள்ளினர்.

இதனையடுத்து மனோகரா கோஷ்டியினர் சுறுசுறுப்பாக ஆடத் தொடங்கினர் ஆனால் மனோகரா கோஷ்டியினர் எவ்வளவு தீவிரம் காட்டியபோதும் டயமண்ட் வீரர்களின் ''பாசிங்'' மனோகரா கோஷ்டியினரைத் திணறடித்தது. டயமண்ட் வீரர் த. ஜெகசோதிநாதன் இரண்டாவது கோலைப் போட்டு எண்ணிக்கை 2-0 ஆக்கிக் கொண்டார்.

இடை வேளையின் பின்னர் இரு கோஷ்டிகளும் ஒன்றையொன்று விட்டுக் கொடுக்காமல் விளையாடியது. போட்டி முடியும் தறுவாயில் மனோகரா கோஷ்டி ஒரு கோலைப் போட்டுக் கொண்டது. 2-1 கோளால் வதிரி டயமண்ட் அல்வாய் மனோகராவைத் தோற்கடித்தது.

திரு. சி. ஜோதிரவி இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## திருடர் தொல்லை

உடுப்பிட்டி. வியாழன்

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் இ. போ. ச. பஸ்களில் திருடர்தொல்லை அதிகரித்துவருவதாக புகார்கள் தெரிவிக்கின்றனர். சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணத்திலிருந்து கரணவாய் வந்து கொண்டிருந்த ஒருவர் தனது மூக்குக்கண்ணாடியுடன்கூடிய கண்ணாடிக்கூட்டை ஓடும் பஸ்ஸில் பறிகொடுத்துவிட்டுத் தவித்தார்.

7-30 பண்ணுறிந்த மிழ், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 பஜனை, 7-00 கிராமசஞ்சிகை, 7-30 யூனெஸ்கோ உரைச்சித்திரம் 7-45 தொடர்நடனம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் விருப்பம்.

......

## மூன்று பிள்ளைகளின் தந்தை தற்கொலை

கோப்பாய், வியாழன்

கோப்பாயிலுள்ள கடை சொந்தக்காரரான பொன்னையா (வயது 40) என்பவர் தமது கடையினுள் நச்சுத் திராவகம் அருந்திய நிலையில் இறந்து கிடக்கக்காணப்பட்டார்.

மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையான இவரது மரணம் குறித்து மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினர்.

இறந்தவரால் எழுதப்பட்டதெனக் கருதப்படும் கடிதமொன்று கோப்பாய்ப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

காலஞ்சென்றவரின் மனைவி மீனாட்சியம்மாள் உட்படப் பலரது சாட்சியங்களை அடுத்து தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அன்று நாம் செய்தது பிழையா? 65-ம் ஆண்டு யூ. என். பிக்கு ஆதரவளித்தோம் பிரதமர் டட்லியுடன்ஒப்பந்தம் செய்து ஒத்துழைப்பு வழங்கினேம். 4 ஆண்டுகள் நகர்ந்துவிட்டன. ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி பிரதமருடன் பலமுறை பேச்சுவார்த்தை நடத்தினேம். இறுதியில்கண்டது ஏமாற்றம்தான் மாவட்டசபையை நிறைவேற்றுவோம் என்று கூறினர்கள். ஆனால் கடைசி வரை அதை நிறைவேற்றவில்லை. அதன் பின் தமிழ் பல்கலைக் கழகம் ஒன்று தமிழருக்கு வேண்டுமென்று கேட்டோம். இலங்கையில் தற்பொழுது 4 சர்வகலாசாலைகள் உண்டு பேராதனையில் தேசிய சர்வகலாசாலை இருக்கிறது. கொழும்பு நகரில் ஒரு சர்வகலாசாலை இருக்கிறது. இதை விட சிங்களமக்களுக்கு 2 பல்கலை கழகங்கள் உண்டு தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகமும் கூடக்கிடையாது.

திருமலையில் பல்கலைக்கழகம் நிறுவித் தருவதாக பிரதமர் பல தடவை கூறியிருந்தார். ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை இதிலும் ஏமாற்றம்தரின்கிடைத்தது

பிரதமர் டட்லிசேனநாயக்கா இன்னும் ஆட்சிசெலுத்தப்போகும் ஒரு வருடகாலத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு எதையும் செய்யப்போவதில்லை என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது. இந்த நிலையில்இன்னும் நாம் அரசாங்கத்திற்கு ஆதரவளித்துக்கொண்டிருப்பதில்

கோண்டாவில் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம் நடாத்திய நாடக விழா சென்ற 2-ம் திகதி மாலை புலவர் செ. து. தெட்சணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

தலைவர் விழாவைத் தொடக்கி வைத்து உரையாற்றுகையில் நாடகக்கலை தான் வாழ்வைமாற்றியமைக்க, மறுமலர்ச்சியைக் காணப் பணிபுரியக்கூடியதென்றும் அந்தக் கலையை இங்குள்ள மக்கள் பேணி வளர்ப்பதைக் கண்டு பெருமை கொள்வதாகவும் கூறினர். அவர் மேலும் தமது உரையில் நாடகக் கலையை ஈழத்தில் வளர்க்க வேண்டுமானல் கலைஞர்கள் வேறுபாடுகளை மறந்து ஒரு சலாமன்றத்தை அமைத்துக் கொள்வதுதான் அவசியமானது என்றுர்.

அடுத்து முரசையூர் திரு. மு. சிவலிங்கம் உரையாற்றுகையில் கூறியதாவது:-

நாடகம் என்றால் நாடு-அகம் என்ற இரு சொற்களின் இயைவு. வாழுகின்ற நாடும் வதிகின்ற வீடும் மறுக்கமுடியாத தொடர்புடையன, வீட்டு வாழ்வையும் நாட்டுவாழ்வையும் சுட்டிக்காட்டி இரண்டின் வாழ்வையும் இணைத்து உயர்த்தவே நாடகம் என்ற நற்கலை பிறந்தது. ஆகவே வாழ்வியலின் குறையையும் நிறையையும் எடுத்துக்காட்டவே நாடகக்கலை பணிபுரியவேண்டும். விசையற்று ஊர்ந்துகொண்டிருக்கும்வெள்ளத்தை போலவே நாடகப்போக்கு இன்று இருக்கிறது. போக்கு மாற வேண்டும், கதாநாயகனும் வில்லனும், நகைச்சுவை நடிகனும் கள்வனுக்கு நடிப்பவனும் இன்றைய நாடகங்களில் ஒரேமாதிரியே நடிக்கிறர்கள். இது திரைப்படத்தாலேற்பட்ட தாக்கம்தான் நாடகம் நாடகமாக இருக்கவேண்டும். பாத்திரங்கள் தாம்கொண்டிருக்கும் பாத்திரத்தன்மையையுணர்ந்து நடிக்கவேண்டும். அப்பொழுதுதான் நாடகம் வளரும். (ந-நி)

......

## புதிய வழக்கறிஞர்

கோப்பாய்; வியாழன்

கோப்பாய் திரு. எஸ். சுப்பிரமணியம்தம்பதிகளின் மூத்த புதல்வனும், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனுமாகிய திரு. எஸ். பரமேஸ்வரன் வழக்கறிஞராக நியமனம் பெற்றுள்ளார்.

இவர் தமது புதிய வழக்கறிஞர் பதவிக்கான சத்தியப்பிரமாணத்தை கொழும்பு பிரதம நீதியரசர்முன்னிலையில் சமீபநாட்களுக்கு முன் செய்துகொண்டார்.

### பயங்கரமானதாம்

கண்டி, திங்கள்

'சமீபத்தில் வெளியான திறைசேரிச் சுற்றுநிருபம் பயங்கரமானதும் சிங்கள மக்களுக்கு தீங்கு விளைவிக்கத்தக்கதுமாகும்' என வெலியம்பேயில் நடைபெற்ற கூட்டணிக்கட்சிகளின் பிரசாரக்கூட்டத்தில் பேசிய திரு. ரி. பி. இலங்கரத்தின கூறினர்

## நாத்திகம் ராமசாமிக்கு சிறை

சென்னை. ஏப். 10

நாத்திகம் இதழ் ஆசிரியர் திரு. ராமசாமிககு ஆறு மாத ஜெயில்தண்டனைவிதிக்கப்பட்டது.

கடந்தஆண்டில் ஏப்ரல் மாதம் 26-ந் திகதி நாத்திகம் இதழில் திரு. சி. பா. ஆதித்தனுர்பற்றி இவர் அவதூருக எழுதியதாக இவர் மீது வழ்க்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த திரு. ராமசாமிகுற்றவாளியாகக் காணப்பட்டு தண்டிக்கப்பட்டார்.

......

## நடந்து செல்கின்றனர்

புலோலி, வியாழன்

அம்பன், நாகர்கோயில், குடத்தனை போன்ற இடங்களிலிருந்து கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும், மாணவிகளும் காலை 5 மணியிலிருந்து நடக்க ஆரம்பித்து எட்டு மணியளவில் பரீட்சை நடக்கும் ஸ்தானத்தை அடைய வேண்டிய கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

இப்பகுதிக்கு ஓடும் இ. போ. ச. பஸ்களை நம்பிக் கொண்டிருக்கமுடியாத காரணத்தினலேயே பரீட்சைக்குத் தோற்றுவோர் இவ்விதம் பலமைல் தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளதாம்.


இன்று குதூகல ஆரம்பம்!
ராணி [யாழ்ப்பாணம்]
(தினசரி 4 காட்சிகள்)
★ ஜய்சங்கர் ★ விஜயகுமாரி
★ எஸ். வி. சுப்பையா
★ ஸௌகார்ஜானகி ★ சகஸ்ரநாமம் ★ நாகேஷ்
நடித்த
ஜீவனம்சம்
[புதுவருட வெளியீடு]

தம்பி அன் கோ.
வண்ணார்பண்ணையில்
ரூ. 10000/- தொடக்கம் ரூ. 30000/- வரை
சீதன சேமிப்புக்கு
வருடம் 12 சத வீதம் வட்டி
கொடுக்கப்படும்.
ஒவ்வொரு வருடமும் வட்டி எடுக்கலாம்.
குறிப்பு:-
இப்பணத்தை 30 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பாவின் ஒருமைப்பாடு பற்றிய

# 'வார்ஸோ' நாடுகளின் யோசனைக்கு 'நேட்டோ' பொதுவாக வரவேற்பு

வாஷிங்டன், ஏப். 10

வார்ஸோ ராணுவ ஒப்பந்த நாடுகள் ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் உறவு பலப்படவேண்டும் என்று கருத்து வெளியிட்டிருப்பது குறித்து 'நோட்டோ' ஒப்பந்த நாடுகளின் காரியதரிசி ஜெனரல் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இந்தக் கருத்தை மிக நுணுக்கமாகவும் யதார்த்தமாகவும் ஆராயவேண்டும் என்று சின்யோ பிராஸியோ கூறினார்.

வட அட்லாண்டிக் இராணுவ கூட்டு ஒப்பந்த நாட்டுத் தலைவர்களின் 20-வது வருடாந்த மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக நோட்டோ தலைவர்கள் வாஷிங்டனில் கூடியிருக்கிறார்கள்.

பிரிட்டனில்காமன்வெல்த் உறவுகள் அமைச்சர் திரு ஸ்டுவர்ட் கருத்து வெளியிடுகையில், வார்ஸோ ஒப்பந்த நாடுகள் வெளியிட்டுள்ள யோசனையைப் பரிசிலனை செய்வது பயனுள்ளதாய் இருக்குமென்று குறிப்பிட்டுள்ளார்.

பிரெஞ்சு அமைச்சர் திரு. தாப்ரே கருத்து வெளியிடுகையில், வார்ஸோ நாடுகளின் யோசனை பற்றி ஆராய்வதற்கு இன்னும் காலம் வரவில்லை என்றார்.

# நினைவிலுள்ள காலத்தில் இதுபோல் வரட்சி ஏற்பட்டதில்லை

## தமிழ் நாடு நிலைமை பற்றி கவர்னர்கவலை

சென்னை, ஏப்ரல்10

தமிழ்நாட்டில் நினைவில் இருக்கும் கால வரலாற்றில் இப்போதுபோல் வரட்சிஏற்பட்டது கிடையாது என்ற தமிழ்நாடு கவர்ணர் சர்தார் உஜ்ஜல்சிங் கூறியிருக்கிறார். குடிதண்ணீர் பிரச்னை மிக மோசமாகியிருப்பதை அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார் வடஆற்காடு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மோசமான நிலைமையை அவர் குறிப்பிட்டார்.

குடிதண்ணீர் தட்டுப்பாட்டின் காரணமாக கொள்ளை நோய்கள் பரவாமல் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கும்படி முதலமைச்சர் திரு.மு.கருணாநிதி மாவட்ட கலெக்டர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

பஞ்சநிவாரணத்துக்கு

# பிரதமர் இந்திரா ஒருலட்சம் அனுமதி

தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சியின்காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிப்பதற்கென பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி ஒரு லட்சரூபா அனுப்பியிருக்கிறார்.

பிரதமரின் பஞ்சநிவாரண நிதியிலிருந்து திருமதி இந்திரா காந்தி இந்தப் பணத்தை அனுமதி கிருர்,

இத்தகவலை பத்திரிகை நிருபர்களிடம் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.கருணாநிதி தெரிவித்தார்.

டெல்லி அரசு சார்பில் தமிழ்நாட்டுக்குக் கொடுக்கப்படவிருக்கும்பெருந்தொகைக்கு இது அடையாள தொகையாக வந்திருக்கிறது என்று தாம் நன்றியோடு ஏற்றுகொள்வதாக திரு. கருணாநிதி கூறினார்.

## பிரிட்டனின் 'சுபர்சோனிக்' விமானம்

லண்டன், ஏப். 16

பிரிட்டன் தனது முதலாவது மின்வேக விமானமான 'ரொட்ரோர்ட்'டை நேற்று பலக்க விட்டு பரிசோதனை நடத்தியது. 'கொங்கோர்ட்' 20 நிமிடங்கள் பறந்துவிட்டுத் திரும்பி வந்தது. இந்த விமானம் 19-73ம் ஆண்டளவில் வழமையான போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும். நியுயோர்க்கிற்கும் லண்டனுக்கும் உள்ள தூரத்தை இந்த மின்வேக 'சுப்பல் சோனிக்' விமானம் மூன்றரை மணித்தியாலங்களால் குறைந்துவிடுமாம்.

# நைஜீரிய சமஷ்டி படைகள் முன்னேற்றம்

## பியாப்ரா முக்கிய நகர் வீழ்ச்சியுறலாம்

லேகோஸ், ஏப்10.

நைஜீரிய சமஷ்டி படைகள் பியாப்ராவின் கடைசி அதிமுக்கிய நகரமான உமுவாஹியாவுக்கு 7 மைல் தொலைவில் இப்பொழுது இருப்பதாக செய்திகள் கூறுகின்றன. பிரிந்துபோன வியாப்ரா நைஜீரியாசமஷ்டி படைகளிடம் வீழ்ச்சியடையக் கூடும் என்று கருதப்படுகின்றது.

ஏற்கனவே வியாப்ராவின் ரெயில்வேநகரமான உஸ்வாகோஸயை சமஷ்டிப் படைகள் பிடித்துக்கொண்டன ஆனல் அந்த நகரைத் திருப்பி பிடித்துவிட்டதாக பியாப்ரா அறிவித்தது. இந்தக் கூற்றை வெறும் பிதற்றல் என்று நைஜீரியா கூறியது. உஸிவாக்கோவுக்குஅப்பால் சுமார் 12 மைல் தொலைவிலிருக்கும் உமுவாஸியாவை சமஷ்டி படைகள் போய் அடைவதற்கு இன்னும் ஏழு மைல் தூரமே இருக்கிறதாம்.

யுனெஸ்கோஆ தரவுடன்

# சர்வதேச தமிழ் ஆராய்ச்சிக்கழகம்

புதுடில்லி, ஏப்ரல் 10

சர்வதேச தமிழ் ஆராய்ச்சிக்கழகம் நிறுவுவதற்கு ஐ. நா.வின் கல்வி கலாச்சார ஸ்தாபனம் இந்திய அரசுக்கு உதவிசெய்ய முன்வந்திருக்கிறது.

இத்திட்டத்தை யுனெஸ்கோ கொள்கையளவில் ஒப்புக்கொண்டிருக்கிறது.

யுனெஸ்கோ ஆதரவில் நிறுவப்படும் ஆராய்ச்சிக்கழகம் சென்னையில் அமையும்.

இது விஷயமாக தமிழ்நாடு அரசுடன் கலந்து பேசுவதற்காக மத்திய கல்வி அமைச்சர் திரு. வி. கே. ஆர். வி. ராவ் சென்னைக்கு

## தடையுத்தரவு

புதுடில்லி, ஏப். 9

பஞ்சாப் சட்டசபையிலிருந்து முன்னாள் முதலமைச்சர் திரு. லட்சமன்டி சில்லுக்கு ஒரு வார காலத்திற்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சபையை நடைபெறுமல் தடுத்தார் என இவர் மீது சபாநாயகர் குற்றம் சாட்டினார்.

......

## தம்பிரான் சுவாமிகள் திரும்பினர்

கோப்பாய், வியாழன்

சமயப்பிரசாரத்துக்கென தமிழகம் சென்றிருந்த நல்லை ஞானசம்பந்தர் ஆதீன அதிபர் ஸ்ரீசுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் திரும்பினர்.

இம்மாதம் 18,19,20-ம் திகதிகளில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஞானசம்பந்தர் உற்சவம் கொண்டாடப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

......

## ஆசிரியர்கள் ஆலோசனை

கோண்டாவில், வியா.

45 50 வயதுக்குட்பட்டவரும், சமீபத்தில் கிளிநொச்சித் தொகுதிக்கு மாற்றலாகிச்செல்ல ஆயத்தமாக இருங்கள் என அறிவித்தலொன்றை வடமாநில வித்

இலங்கையில்

# பிரஜாவுரிமை மனுக்கள் துரிதமாகபைசலாகுதாம்

## இந்திய மந்திரி கூற்று

புதுடில்லி, ஏப்ரல் 10

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான நேச உறவுகள் சரியான திசையில் போய்க்கொண்டிருப்பதாகவும் இந்திய வம்சா வழியினரின் பிரஜாவுரிமை கோரிக்கைகளை இலங்கை அரசு அனுதாபத்துடனும் துரிதமாகவும் பைசல் செய்வதாகவும் இந்திய லோக் சபையில் உதவி வெளி விவகார அமைச்சர் திரு சுரேஸ்திர பால்சிங் கூறினார்

மானியக் கோரிக்கையொன்றின்மீதான விவாதத்தில் திரு சிங் குறுக்கிட்டுப்பேசினர். அவர் மேலும் கூறியதாவது:

உறவுநேசபாவமாக சரியான திசையில் செல்கிறது நாடற்றவர்கள் பற்றிய உடன்பாட்டின் அமுல் திருப்திகரமாக உள்ளது. ஆரம்பத்தில் சிறிது தாமதம் இருந்தது ஆனல் தக்க சட்டம் இயற்றியபிறகு பிரஜா உரிமை கோரிக்கை மனுக்களை அனுதாபத்துடனும் துரிதமாகவும் இலங்கை அரசு பைசல் செய்கிறது. பரஸ்பர விவாதம் மூலம் கச்சதிவுப் பிரச்னையையும் மீன்பிடி உரிமையையும் முடிவுசெய்ய இந்தியாவும் இலங்கையும் முடிவு செய்துள்ளன. அதற்கிடையில் தற்போதுள்ள நிலைமை நீடிக்கப்படும்.

## "முதலாளித்துவ அமைப்பின்கீழ் தமிழினத்துக்கு விமோசனமில்லை"

யாழ்ப்பாணம், வெள்ளி

"மனிதனை மனிதன் சுரண்டி வாழமுடியாத சமூக அமைப்பான சோஷலிச அமைப்புள்ள நாடுகளில் தான் சகல இனங்களும் உரிமை பெற்று இன்பமாக வாழ்கின்றன. சமூகத்தை சமூகம், இனத்தை இனம் தாழ்த்த ஒடுக்க முடியாத அமைப்பு சோஷலிசத்தின் கீழ்தான் உருவாக முடியும்" என்று கம்யூனிஸ்ட் கட்சியின் (மாஸ்கோ சார்பு) வடபகுதி மாவட்ட செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

முதலாளித்துவ அமைப்பின் கீழ் தமிழினம் விமோசனம் காணமுடியாது என்றும் அவ் அறிக்கை கூறுகிறது.

"முதலாளித்துவ கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து உரிமை பெறலாம் என்ற நினைவு கனவாகி விட்டது" என்று குறிப்பிட்டுள்ள அவ்வறிக்கையில் "தமிழ் கட்சிகளின் பலத்தின் அடிப்படையிலோ அன்றி தமிழ் பெரும் தலைவர்களின் அசுர சாதனைகளாலோ நம்பிக்கை வைத்து தமிழரின் விடுதலை காணமுடியாது என்பதை வரலாறு தெரிவுபடுத்தி விட்டது புதுவழியில் மாற்றம் ஏற்படுத்தும் வகையில் சோஷலிச சக்திகளுடன் அணிதிரண்டு தமிழினமும் தனது விடுதலை காணமுன் வரவேண்டும் என்று அழைக்கிறோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக் கிளையின் மாவட்டக் குழுவினரின் கூட்டத்தில் இவ்வறிக்கை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (தே நி)

## நெடுந்தீவில் பொலிஸார் சிரமதானம்

நெடுந்தீவு, வியாழன்

நெடுந்தீவு மத்தியிலுள்ள மணற்கிணறுகளை இறைத்து சுத்தம் செய்வதில் நெடுந்தீவு பொலிசாரும் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சிரமதானவேலையில் பொதுமக்களுடன் நெடுந்தீவு கிராமசேவையாளர்களும் ஈடுபட்டிருந்தார்கள்.

பொதுமக்கள் குளிக்கவும் குடிநீர் எடுக்கவும் கட்டப்

## வெகுஜன இயக்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சட்டத்தை அமுல்நடத்தி ஆலயப்பிரவேச இயக்கத்திற்கு ஆதரவளிக்க வேண்டிய பொலிஸார் வழிபாட்டுக்கு வந்த பக்தர்களை நையப் புடைத்தது குறித்து பலத்த கண்டனம் ெர்ரிவிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...பியிருக்கிறார்.

பிரதமரின் பஞ்சநிவாரண நிதியிலிருந்து திருமதி இந்திரா காந்தி இந்தப் பணத்தை அனுமதிகிறார்,

இத்தகவலை பத்திரிகைக்கு இது அடையாள தொகையாக வந்திருக்கிறது என்று தாம் நன்றியோடு ஏற்றுககொள்வதாக திரு. கருணாநிதி கூறினார்.

...றரை மணித்தியாலங்களால் குறைந்துவிடுமாம்.

## ஜோர்டான் நதிக்கு குறுக்கே

# ஜோர்டான் - இஸ்ரேல் பிரங்கிச்சண்டை

அம்மான், ஏப்ரல் 10

நேற்று மீண்டும் ஜோர்டானியரும் இஸ்ரேலியரும் ஜோர்டான் நதிக்கு குறுக்கே பீரங்கிகளால் மோதிக்கொண்டார்கள்

இஸ்ரேலியர் முதலில் சுட்டதாகவும் அவர்களின் ரொக்கட் நிலைகளை அமைதிப் படுத்துவதற்காகத் திருப்பிச்சுட நேர்ந்ததாகவும் ஜோர்டானிய தரப்பில் கூறப்பட்டது.

இன்னொரு இடத்தில் இஸ்ரேலியர் அரபுக் கொமாண்டோ துருப்புகள் மீது நடத்திய தாக்குதலில் இரு கொமாண்டோ வீரர்கள் கொல்லப் பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் இஸ்ரேலியர் தரப்பில்கூறப்பட்டது.

நேற்று முன்தினம் இஸ்ரேலியரும் எகிப்தியரும் சூயஸ்கால்வாய்க்கு குறுக்கே பலமணிநேரம் மோதிகொண்டார்கள். இதில் 40 இஸ்ரேலியரைக் கொன்று குவித்துவிட்டதாக எகிப்தியர் கூறினர்.

## இந்தியாவில்

# தீண்டாமையையொழிக்க தேசிய இயக்கம்

### பாரதப்பிரதமர் யோசனை

புதுடில்லி, ஏப். 10

இந்தியாவில் நிலவும் ஜாதிவெறியையும் தீண்டாமையையும், நீக்குவதற்கு முயற்சி செய்யும் வகையில் தேசிய ரீதியில் இயக்கமொன்றை ஆரம்பிக்கவேண்டும் என்று பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்து 20ஆண்டுகள் ஆகிவிட்டது. நமது ஜனநாயக வாழ்க்கை அமைப்பில் இன்னும் தீண்டாமையையும், ஜாதிவெறியையும் தெரிவித்துவிட முடியாமல்இருக்கின்றோம். இதனை நாட்டுக்கு சவாலாகவே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு திருமதி காந்தி மகாத்மாகாந்தி ஞாபகார்த்த நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுகையில் கூறினார்.

# இத்தாலி நகரில் குழப்பம் இருவர் பலி

ரோம், ஏப். 10

இத்தாலி நகரொன்றில் புகையிலைத் தொழிற்சாலையொன்றில் ஏற்பட்ட தகராறு காரணமாக நகரில் தொழிலாளருக்கும் பொலிசாருக்குமிடையில் ஏற்பட்ட போராட்டத்தில்பொலிசார் சுட்டு ஒரு பெண்ணும் இன்னொரு இளைஞனும் மரணமானார்கள். போராட்டக்காரர்கள் நகரில் பிரதான இடங்களில் குழப்பம் விளைவித்ததோடு நகர மண்டபத்துக்கும் தீ மூட்டினார்கள். பத்தாண்டுகளில் இம்மதிரியான குழப்பம் இத்தாலியில் நடந்ததில்லையாம்.

## வியட்னாமிலிருந்து

# யு. எஸ். படைகளில் ஒருபகுதி விலகலாம்

நியுயோர்க், ஏப். 10

தென் வியட்னாமிலிருந்து அமெரிக்கா தனது படைகளை கணிசமான அளவு சிறிது சிறிதாக வாபஸ்பெற்றுக்கொள்ளக்கூடும் என்று ஹேஸ்யம் நிலவுகின்றது.

வடவியட்னாமும் ஏககாலத்தில் தனது படைகளை வாபஸ்பெறுவதற்குமுன்வரவேண்டும் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. ரோஜர்ஸ் முன்னர் கருத்து வெளியிட்டிருந்தது சுட்டிக்காட்டப்படுகின்றது.

வடவியட்னாம்தனதுபடைகளில் மூவாயிரம் பேரை தென் வியட்னாமிலிருந்து விலக்கிக்கொள்வதாய் இருந்தால் அமெரிக்கா 50ஆயிரம் படைகளை தென்வியட்னாமிலிருந்து வாபஸ்பெறுவதற்கு தயார் என்று அமெரிக்க தரப்பு முக்கிய அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

### பணக்காரரைப் பிடிக்க உத்தரவு

கராச்சி, ஏப். 10

பாகிஸ்தானில் வரிகொடுக்காமல் அரசாங்கத்தை ஏமாற்றியதாக மிகப்பெரிய பணக்கார குடுப்பத்தைச் சேர்ந்த ஒருவரைப் பிடிக்க ராணுவ ஆட்சியாளர் உத்தரவிட்டுள்ளனர். ராணுவ ஆட்சி வந்தபின்னர் இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

...வில் ஒப்புக்கொண்டிருக்கிறது.

யுனெஸ்கோ ஆதரவில் நிறுவப்படும் ஆராய்ச்சிக்கழகம் சென்னையில் அமையும்.

இது விஷயமாக தமிழ்நாடு அரசுடன் கலந்து பேசுவதற்காக மத்திய கல்வி அமைச்சர் திரு. வி. கே. ஆர். வி. ராவ் சென்னைக்கு விரைவில் விஜயம் செய்யவிருக்கின்றார்.

# உதவவந்தவர்களே உபத்திரவம் தந்தனர்

### கருணாநிதிக்கு காயம் ஏற்பட்டது எப்படி?

சென்னை, ஏப். 10

தமிழ்நாடு முதலமைச்சர் சமீபத்தில் ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டபொழுது மேடை சரிந்து காயமடைந்தார் அல்லவா? அதுபற்றி நிருபர்கள் அவரிடம் கேட்டபொழுது பின்வருமாறு பதில் சொன்னார்.

கோவை மாவட்டம் ஆப்பகூடலில், என். மகாலிங்கம் அவர்கள் நடத்திய விழாவில் நான் கலந்துகொண்டேன் மேடை 200க்கு 200 அடி சதுரத்தில் பெரிய மேடை போடப்பட்டிருந்தது. நீண்ட பந்தலும் போடப்பட்டிருந்தது.

இரவு 8 மணியிருக்கும். நான் பரிசு கொடுத்து முடிந்ததும், மதியழகன் பேச ஆரம்பித்தார். அப்பொழுது பயங்கர மின்னல், புயல், மழை மூன்றும் சேர்ந்து வீச ஆரம்பித்தது.

இதனால் மேடையும் பந்தலும் ஒரு பக்கம் சாய ஆரம்பித்தன. மேடையில் நிறைய ஆட்கள் ஏறி நிற்கத் தொடங்கினார்கள். திடீரென்று விளக்குகளும் அணைந்துவிட்டன.

உடனே பொதுமக்கள் அங்குமிங்கும் அலறியடித்துக்கொண்டு ஓட ஆரம்பித்தார்கள். இந்தக் குழப்பத்தில் என்னைக் காப்பாற்றுவதற்காக மதியழகன் என்னைத் தனியாக அழைத்துப் போக முயன்றார். சின்னச்சாமியும் (எம். எல். ஏ.) என்னைப் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்ல முயன்றார்.

என்னைப் பாதுகாப்பதற்காக இருட்டில் முண்டியடித்துக்கொண்டு முன்னேறிய பெரும்பான்மையோர் என் மேலே விழுந்து துவைத்து விட்டார்கள். இருட்டில் ஒன்றும் தெரியவில்லை. சுமார் 15நிமிடங்களுக்கு ஏதோ சினிமாவில் நடப்பதுபோலவே இந்த குழப்பம் நடந்தது.

என் இடது காலில் நாலு ஐந்து இடங்களில் உரசிவிட்டது. நெஞ்சில் அடிபட்டதால், நெஞ்சில் வேறு வலி ஏற்பட்டுவிட்டது. உடனே பொள்ளாச்சி மகாலிங்கம் என்னை ஓடோடி வந்து பார்த்துப்பதறிபோனார். இப்படி ஆகிவிட்டதே என்று மிகவும் வருத்தப்பட்டார், 'பரவாயில்லை. மேடைபந்தல் எல்லாம் வலுவாகத்தான் போட்டுஇருக்கிறீர்கள். திடீரென்று புயலினால் தான் இப்படிஆகிவிட்டது' என்று அவரைத் தான் நாங்கள் சமாதானப்படுத்தினோம்.

ஈரோடுவரை எங்களுடன் வருத்தப்பட்டுக் கொண்டே வந்தார். மின்னல் காரணமோ, அல்லது பந்தல் சரிந்த காரணமோ மின்சாரம் துண்டிக்கப்பட்டு விட்டது. நல்லவேளையாக அப்படி மின்சாரம் துண்டிக்கப்படாவிட்டால் ஆயிரக்கணக்கில் பலியாகி இருப்பார்கள். டியூப் லைட்டுகள் எல்லாம் 'படார் படார்' என்று வெடிக்க ஆரம்பித்தன.

அந்த நெஞ்சு வலிக்காக ஆஸ்பத்திரியில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன்.

......

### தங்கச் சங்கிலியை பறித்தார்களாம்

வளவெட்டித்துறை. வியா.

பொல்லால் அடித்து படுகாயம் விளைவித்து விட்டு 450 ரூபாய் பெறுமதியான தங்கச் சங்கிலிகளை பறித்தார்களாம் மூவர். துன்னாலை வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னம்மா என்பவரை ஒருவர் கட்டிப் பிடிக்க மற்றொருவர் பொல்லால் அடித்துத் தாக்கி விட்டு சங்கிலியைப் பறித்துக் கொண்டு ஓடினார்களாம். சந்தேக நபர்களை பருத்தித்துறை பொலிஸார் தேடி வருகின்றனர்.

### ஆலோசனை

கோண்டாவில், வியா.

45 50 வயதுக்குட்பட்டவரும், சமீபத்தில் கிளிநொச்சித் தொகுதிக்கு மாற்றலாகிச்செல்ல ஆயத்தமாக இருங்கள் என அறிவித்தலொன்றை வடமாநில வித்தியாதிபதியின் மூலம் பெற்றுக் கொண்டவர்களுமான வயோதிப ஆசிரியர்கள் சேர்ந்து கோண்டாவில் மேற்கு சன சமூக நிலையத்தில் ஓர் ஆலோசனைக்கூட்டம் நடாத்தினர்.

இடமாற்ற முன்னறிவித்தல் பெற்ற ஆசிரியர்கள் அனைவரையும்கலந்து ஆவன செய்ய ஓர் நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது.

தலைவர்: திரு. செ, கனகரத்தினம், உபதலைவர்: திரு, செ. நடராசா, காரியதரிசி; திரு. சு. பசுபதிப்பிள்ளை, உபகாரியதரிசி: திரு. செ. அப்புத்துரை, தனாதிகாரி: திரு. வே. நல்லதம்பி.

நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

......

### உபதபாலதிபர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

'மற்றைய அரசாங்க ஊழியர்களுக்கு இருப்பது போல், பென்சன் உரிமைகள் உபதபால் அதிபர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.'

அகில இலங்கை தமிழ் பேசும் உபதபாலதிபர்கள் சங்கத்தினர் சம்பள நிர்ணய சபைக்கு விடுத்துள்ள கோரிக்கையில் கேற்கண்டவாறு கோரியுள்ளனர்.

அவர்கள் விடுத்துள்ள மற்றும் கோரிக்கைகள் வருமாறு:-

ஒரு நிரந்தரமான சம்பளத் திட்டம். மற்றய தபால் அதிபர்கள் பெறும் சம்பளப்படி முதலிய, உபதபால் அதிபர்கள் தெரிவுக்கு பகிரங்க பரீட்சை நடத்துதல், உபதபால் அதிபர்களுக்கு ஒரே யொரு தரம் பிரிப்பு.

### தற்கொலை

வல்வெட்டித்துறை, வியா.

துன்னாலையைச் சேர்ந்த ஆறுமுகம் கார்த்திகேசு என்பவர் நோயின் வேதனை தாங்காது நச்சுத்திராகவம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வி. பி. இராசரத்தினம் ஸ்தலத்தில் வைத்து விசாரணை செய்தபின் நச்சுத் திராகவம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார் எனத் தீர்ப்பளித்தார்.

இறந்தவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கிறார்களாம்.

...சுத்தம் செய்வதில் நெடுந்தீவு பொலிசாரும் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சிரமதானவேலையில் பொதுமக்களுடன் நெடுந்தீவு கிராமசேவையாளர்களும் ஈடுபட்டிருந்தார்கள்.

பொதுமக்கள் குளிக்கவும் குடிநீர் எடுக்கவும் கட்டப்பட்டுள்ள இக்கிணறுகள் யாவும் சுத்திகரிக்கப்பட்டு வருவது நெடுந்தீவு மக்கள் மத்தியில் பெருமகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இக்கிணறுகளை இறைப்பதற்குவேண்டிய நீர் இறைக்கும் யந்திரத்தையும் வேண்டிய தேநீரையும் நெடுந்தீவு சந்தைக்கடை ஸ்தாபனத்தாரும் நெடுந்தீவு மத்தியிலுள்ளஇராமநாதர் பேக்கறி ஸ்தாபனத்தார் வேண்டிய பணிசையும் இனாமாக அன்பளிப்புச்செய்தனர். கிணறுகளை நன்கு சுத்திகரிப்பதில் நெடுந்தீவு பொலிசாரும், கிராம சேவையாளர்களும், கிராமமுன்னேற்றச் சங்கத்தாரும், பொதுமக்களும் ஈடுபட்டிருந்தனர். பொலிசாருக்கும் பொதுமக்களுக்கும் நல்லெண்ணம் உண்டாவதற்கு இப்படியான சிரமதான வேலைகள் தூண்டுகோலாக இருக்குமென இங்கு நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புதிய கட்டடம்

கோப்பாய், வியாழன்

கோபபாய் தபாற்கந்தோர் வெகுவிரைவில் புதிய கட்டட்மாக உருமாறப் போகிறது. இப்புதிய கந்தோரைக் கட்டுவதற்குரிய காணியை அரசாங்கம் தற்போது விலைக்குப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம், வெள்ளி

சட்டத்தை அமுல்நடத்தி ஆலயப்பிரவேச இயக்கத்திற்கு ஆதரவளிக்க வேண்டிய பொலிஸார் வழிபாட்டுக்கு வந்த பக்தர்களை நையப் புடைத்தது குறித்து பலத்த கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு:—

ஆலயப்பிரவேசம் என்றதும் கோவில் கதவுகளைப் பூட்டுவதும் பொலிசார் முன்னிலையிலேயே முட்கம்பி அடிப்பதும், பொதுக்கிணற்றை அசுத்தப்படுத்துவதும், கோவில் வழிபாட்டுக்கு வருபவர்களை பொலிசார் நையப்புடைத்து கைது செய்வதும், காவலில் வைப்பதும் சமூகக் குறைபாட்டுச் சட்டத்திற்கு எதிரானதா அல்லது உடந்தையானதா என்பதை பாராளுமன்றம் மூலம் கேள்வி எழுப்பி பிரதமரிடம் இருந்து சரியான பதிலைத் தெரிந்து சொல்லும்படி இவ்வியக்கம் திரு. எஸ், டி. பண்டாரநாயக்கா அவர்களைக் கேட்டுக்கொள்கிறது.

பன்றித்தலைச்சி அம்மன் கோவில் உட்பட சகல கோவில்களின் விசேடகாலங்களில் கண்டிப்பாக ஆலயப்பிரவேசத்தை அமுல் நடத்துவதென்ற இயக்கத்தை தொடர்ந்து நடத்துவதென்ற முந்திய முடிவை மிகுந்த உற்சாகத்துடன் இக்கூட்டம் பிரகடனப்படுத்துகிறது.


S. R. S.

ஜவுளி மாளிகையில்

புத்தாண்டு

மலிவு விற்பனை

நடைபெறுகிறது!

பட்டர் நைலெக்ஸ்

பிரின்டட் வோயில்

சேலைகள்

கண்கவர் டிசைன்களில்

மிகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். ஆர். செல்லத்துரை

216, கே. கே. எஸ். ரோட் — யாழ்ப்பாணம்.

போன்: 296


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எல்லையற்ற பொறுமையும் மற்றவர்களிடம் அளவற்ற நம்பிக்கையும், வேண்டிய அளவுக்கு நன்னம்பிக்கையும் சத்தியாக்கிரகவாதிக்கு உள்ளன.

--மகாத்மா காந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 29-ந் திகதி
(11-4-69)


## தமிழரசார் தீர்மானம்

தேசிய அரசாங்கத்துக்கு கடந்த சில மாதங்களாக நிபந்தனையுடன் அளித்து வந்த ஒத்துழைப்பையும் விலக்கிக்கொள்வதென்று தமிழரசுக் கட்சியின் பதினோராவது மாநில மகாநாடு தீர்மானித்திருக்கிறது: இத்தீர்மானம் தமிழரசுக்கட்சியினர் கூறுவதுபோல அவர்களுடைய கட்சியைப் பொறுத்தவரையிலும் தமிழ் இனத்தைப் பொறுத்தவரையிலும் மட்டுமல்லாது நாட்டைப் பொறுத்தவரையிலுமே முக்கியமானதும் புதிய திருப்பத்தை யேற்படுத்தக்கூடியதுமதான். பொறுத்துப்பொறுத்துப் பார்த்தோம். இனியும் பொறுக்கமுடியாதென்ற நிலையிலேயே இந்த முடிவுக்கு வந்தோம்' என்று தமிழரசுக் கட்சியினர் தாங்கள் இத்தீர்மானத்தை மேற்கொண்டதற்கு விளக்கம் தெரிவித்துள்ளனர். இனி எதிர்க்கட்சியிலிருந்து அரசாங்கத்துக்கு ஓர் எதிர்ப்பு இயக்கமாக தமிழரசுக்கட்சி விளங்குமென்றும் பிரதமருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டாலும் அதைத்தாங்கள் ஆதரிக்கப்போவதாகவும் கட்சியின் பொதுச்செயலளர் அறிவித்திருக்கிறர். ஆட்சிமன்றத்தில் இன்றுள்ள கட்சி நிலவரத்தின்படி, தமிழரசுக் கட்சியினர் அரசாங்கத்துக்கெதிராக எதிர்க்கட்சியினருடன் சேர்ந்து வாக்களித்தாலும் அரசாங்கத்தை கவிழ்த்து விடக்கூடிய வாய்ப்பு இருக்காது அரசாங்கத்தில் மற்றும் சில தமிழ்ப் பிரதிநிதிகள் தொடர்ந்து அங்கம் வகிப்பதால் அரசாங்கத்துக்கு எதிராக தமிழ் அரசுக்கட்சியினர் வாக்களித்தலும் தமிழ் மக்களின் எதிர்ப்பையும் அதிருப்தியையும் முற்றுமுழுதாக உணர்த்துவதாக இருக்கமாட்டாது

திரு. டட்லி சேனநாயகா தலைமையில் தேசிய அரசாங்கம் அமைவதற்கு தமிழரசுக்கட்சியினர் அச்சமயம் [...]யைத் தவறியதாலேயே இனி வேறு வழியின்றி நிபந்தனை ஒத்துழைப்பையும் விலக்கிக்கொள்ள தமிழரசார் முடிவு செய்திருக்கின்றனர். கொடுத்த வாக்குறுதிகள் அத்தனையும் நிறைவேற்றப்படவில்லை என்பது உண்மைதான். ஆயினும் கடந்த நான்கு ஆண்டுகளாக நாம் கையாண்ட ஒத்துழைப்புவழியினால் நாம் எதிர்பார்த்த நன்மைகள் அனைத்தையும் பெருவிட்டாலும் ஒரு சில உரிமைகளை நிலைநாட்டியிருக்கிறோம்'' என்று கட்சியின் புதிய தலைவர் திரு சி. மூ. இராசமாணிக்கம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டிருக்கிறர். அவரது கூற்றை வைத்துக்கொண்டு பார்த்தால் தமிழரசுக்கட்சி தோன்றிய காலம்தொட்டு எதிர்க்கட்சியிலிருந்து போராட்டங்களும் வாதாட்டங்களும் நடத்திப் பெற்ற பயனை விட நான்காண்டு ஒத்துழைப்பில் ஓரளவாவது பயன்கிடைத்திருக்கிறது என்பது தெளிவு. மாவட்ட சபைகள் அமைப்பதாகக் கொடுத்த வாககுறுதியை நிறைவேற்ற பிரதமரும் இதர அமைச்சர்களும் மனப்பூர்வமாக முயற்சி செய்தனர் என்பது உண்மை தானென்றும் கட்சித்தலைவர் கூறியிருக்கிறர். எனவே தேசீய ஐக்கியத்தை நிலைநாட்டுவதிலும் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலும் பிரதமருக்கும் மற்றும் அமைசசர் பலருக்கும் மனப்பூர்வமான விருப்பம் இருக்கிறது. திரு. இராசமாணிக்கத்தின் வார்த்தையில் சொன்னல் இன்றைய அரசியல் அமைப்புத்தான் காரணம். எனவே அரசியல் அமைப்பை மாற்றுவதற்குப் பெரும்பான்மையினரின் உதவியும் ஒத்துழைப்பும் அவசியமென்பதை கடந்தகால அனுபவங்கள் உணர்த்தியுள்ளன. எப்படிப் பார்த்தாலும் நான்கு ஆண்டு காலம் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த சில அரசி[...]

# நெருக்கடிமிக்க நேரத்தில் உலகத்தை ஆபத்திலிருந்து காப்பாற்றிய வீரர்

— எம். ரி. சிவம், பி. ஏ. —

**அமெரிக்க அதிபர் பிராங்லின் ரூஸ்வெல்டின் மறைவுதினம் அதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.**

1613-ம்ஆண்டு ஒல்லாந்திலுள்ள ரூசவெல்ட் என்னும் கிராமத்திலிருந்து கிளேய்ஸ் மாற்றென்சென் என்பவர் அமெரிக்காவிலுள்ள நியூ அம்ஸ்ரடாம் (தற்போதுள்ள நியூயோர்க்) என்னுமிடத்தில் குடியேறினர், இவரது முதற் பேரனுன ஜோன் என்பவரே ஜோன்வான் - ரூசவெல்ட் என பெயர்பெற்றுர். ஓர் இடத்தின் பெயரான ரூசவெல்ட் ஓர் குடும்பப் பெயராகி விட்டது. ஜோன்-வான்- ரூசவெல்டின் இன்னெரு சகோதரர் ஜேமிஸ் ரூசவெல்டாகும். இவரது ஐந்தாவது சந்ததிக்காரரே பிரசித்திபெற்ற தியூடோ ரூசவெல்ட் என்னும் அமெரிக்க ஜனதிபதியாகும். ஜேம்ஸ் ரூசவெல்டின் 5-வது சந்ததிக்காரரே 4 தடவைகள் அமெரிக்க ஜனதிபதிப் பதவியை வகுதத வரலாற்று உத்தமரான பிராங்லின் ரூசவெல்டாகும்.

1882-ம் ஆண்டு நியூயோர்க் பட்டினத்தில் ஓர் செல்வந்தருக்கு ஒரேயொரு ஆண்மகனுகப் பிறந்தவரான பிராங்லின் ரூசவெல்ட் இளமையில் கவலையற்ற, செல்வாக்கு மிகுந்த வாழ்க்கையை அனுபவிக்க வாய்ப்புப் பெற்றுர். எனினும் பொதுநலக் கருமங்களில் ஒரு லாவகமான ஈர்ப்பு அவரை இளமையிலிருந்து தழுவிக்கொண்டது.

1907-ல் வக்கீலாக நியூயோர்க்கில் தொழிலாரம்பித்த ரூசவெட்ட், 1910-ல் அரசியல் விவகாரங்களிலிறங்கி அப்பட்டினச் சார்பில் செனட்டராகவும் தெரியப்படலாஞர். 1912-ல் நடைபெறவிருந்த ஜனதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில வூட்ரோ விலசன் ஜனதிசிதி அபேட்சகராக நியமிக்கப்படுவதற்கு அன்னரின் வெகுசாதுர்யமான ஓர் திட்டம் சகலரையும் வியப்பில ஆழ்த்தியது: விலசனும் யகத்தான வெற்றியையீட்டினர். இதற்குப் பின்னணியில நின்று உத்வேகம் [...]

[...]வர் மரணப் பிடியிலிருந்து பிழைத்தெழுந்து தம்மத்தியில வந்துவிட்டாரென்ற ஆரவார்ரம் அக்கூட்டத்தில மட்டுமலல நாட்டின் பல பாகங்களிலும் கட்டுக்கடங்காது புரண்டோடியது.

1932-ல நியூயோர்க் நாட்டுல வரலாற்றில அதுவரை இலலாத பெரும்பான்மை வாக்குப் பலத்துடன் தெரியப்பட்டார்.

1930.ம் ஆண்டு அவர் ஆற்றிய அருப்பெரும் விரிவுரையில 'பொருளாதார கட்டுக்கோப்பின் அடித்தள மனித வர்க்கத்தினை நாம் நீண்ட காலமாக மறந்துவிட்டோமென மிக உருக்கமாகப்பேசி சகல முற்போக்குவாதிகளையும் தன்வசப்படுத்தியதை இன்னும்பலர் எடுத்துக்காட்டாக இயம்பிப் பெருமை அடைவதுண்டு.

ஜனநாயகக் கட்சியினர் தமது சார்பில ஜனதிபதி வேட்பாளராக அவரைத் தெரிந்தெடுத்தனர். அத்தெரிவு நாலுமடங்கு தீர்க்க தரிசனமாகியதை அன்னர் 4 தடவைகள் அடுத்தடுத்து குடிப்பதியாகத் தெரிவுசெய்யப்பட்டபோது உலகம்உணர்ந்துவிட்டது.

1932-ம் ஆண்டு சுமார் 38 மாகாணங்களில பணவரட்சியால வங்கிகள் மூடப்பட்டதைத் தொடர்ந்து 17 கோடி ஊழியர்களின் ஊதியத்திற்கு உலை வைக்கப்பட்டு விட்டது. பற்பல தோட்டங்கள் மூடப்பட்டு உற்பத்தி தடம்புரண்டது

தாங்கொணுப் பஞ்சம், கொலை, கொள்ளை ஆகியவற்றிற்கு வற்ருமல் தூபமிட்டது. இத்தனையையும் ரூசவெல்ட் சமாளிப்பதில் சமத்தர் என்பதை நிரூபித்துவிட்டார். வங்கிகள் திறக்கப்பட்டன. வேலையற்றேர் வாழ்வு பெற்றனர். எங்கு பார்த்தாலும் ரூசவெல்ட் தனது நேரடி மேற்பார்வையில் வெகு துரிதமான நிவாரண திட்டங்களில் கவனம் செலுத்தினர். இவரது தெனசி பள்ளத்தாக்குத்திட்டம் மிகப் பிரமாண்டமான [...]

[...]டித்து வந்தது. ஆனல் 1937 அவர் கூறியது, ''2-ம் உலகப் போர் வருமாயின் அமெரிக்கா மட்டும் தப்பித்துக்கொள்ளும் என யாரும் கற்பனை செய்ய வேண்டாம்''

1938-ல் கிட்லரையும்முசோலினியையும் ஆக்கிரமிப்பதில் இறங்கவேண்டாமெனக் கேட்டுக்கொண்டதுடன் அதற்கு வாக்குறுதியும் தரவேண்டுமென ரூசவெல்ட் கேட்டுக்சொள்ள இருவரும் நகைத்தனர், கிண்டல் செய்தனர். இருவரும் மிகப் பரிதாபகரமான முறையில் அழிந்தொழிய நேரிடும் என ரூசவெல்டின் அப்போதைய வேண்டுகோள் பயங்கரமாகச் சுட்டிக்காட்டியதையார் அறிவர். 1939-ல் கிட்லர் போலந்தைப்பசியாறி விட்டார் என்ற செய்தியைக் கேட்ட ரூசவெல்ட் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் மிக உறுதியான வலிமை மிக்க நேச கருத்தை மின்னல் வேகத்தில் நீட்டினர் ''தற்போது அமெரிக்கா ஆக்கிரமிப்பில் ஈடுபடவில்லையாயினும் நடு நிலை யில்லைஎன்பதை மட்டும் வல்லரசுகள் அறிந்துகொள்ளட்டும்'' எனத் தெளிவு படுத்தினர் மேற்கு நாடுகளில் ஜனநாயக ஆட்சி வேர் பெயருமாயின் அமெரிக்கா பாலைவனமாவதற்கு வெகு நாட்களாகாது என வற்புறுத்திக் கூறினர்.

இதே வேளையில் அமெரிக்கா ஜனதிபதித் தேர்தலும் நெருங்கி விட்டது. ரூசவெல்டுக்கு இது மூன்ருவது தடவையாகி விட்டது. நாட்டின் நெறிகள் இனியும் இடம் கொடுக்குமா? கொடுக்க வைத்தாலென்ன என்ற ஏக்கம் பலர் மத்தியில் ரூசவெல்ட் இணைப்பதுவே திட்டமிட்டிருந்தார். ஊலகத்தை வரலாறு மிக மிகத் திண்மையான பயங்கரப் பரீட்சைக்குள்ளாக்கிய காலகட்டம் அது. வரலாறு வந்த பாதையிலேயே பின்னேறுவதா அல்லது தனக்கே உரித்தான பாதையில் இதுகாறும் போல் முன்னேறுவதா? ரூசவெல்டின் தேர்வில் பதில் கிடைக்க இருந்தது. ரூசவெல்ட் தேர்தலில் இறங்க சம்மதித்து விட்டார் 3-ம் தேர்வில் 5 கோடி அதிகப்படியான வாக்குகளால் ரூசவெல்ட் குடிப்பதியாக தெரியப்பட்டார்.

மூன்ரும் முறை குடிப்பதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டபோது பிரசித்தி பெற்ற 2 குடியரசுப் பிரமுகர்களை தனது அமைச்சர் சபையில் சேர்த்துக் கொண்டார் ஜப்பான் பேள் துறைமுகத்தைத் தாக்கியதால் சேர்ச்சிலுடன் கைகோர்த்துப் போரில் குதித்து விட உகந்த சாட்டும் பெற்றுக் கொண்டார். அங்க இடர்பாடுகளிருப்பினும் ஐரோப்பாவில் போர் புரிந்த அமெரிக்க வீரர்களுக்கு வீரத்துடி பை அடிக்கடி ஏற்படுத்தி விடுவார். அத்துடன் வட ஆபிரிக்கா, எகிப்து, பாரசீகம், யால்டா ஆகிய இடங்களுக்கு விஜயஞ் செய்து போர்க் கேந்திர இடங்களில் வீராதுவசத்தைக் கட்டவிழ்த்து விட்டார். யால்டாவிற்குச் சென்று ரஷ்யத் தலைவர் ஸ்டாலினை நேசநாடுகளுக்காக வசப் படுத்திக் கொடுத்தார்.

2-ம் உலகப் போர் நேச நாடுகளின் வெற்றிப் போராக முடிவுற்றது. அத்துடன் உலக வரலாற்றில் ''அமெரிக்க யுகமும்'' உதயமாகி விட்டது. நான்காம் தடவையாகவும் ரூசவெல்ட் குடிப்பதியாகத் தெரியப் பட்டார். இதற்கு முன்னும், இனிமேலும் இச்சாதனை யாருக்கும் கைகூடுமென எவரும் கூறுவதற்கில்லை.

## சைவாலய தர்மகர்த்தாக்கள் சபை தீர்மானங்கள்

அளவெட்டி, வியா. ஆலய உற்சவங்களை அமைதியாகவும் சிறப்பாகவும் நடத்துவதற்கு அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புச்சபை பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு.

அரசாங்கம் முன் ஏற்பாடாக தக்க நடவடிக்கை எடுக்காததேபன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் வன்[...]

## நாட்டிலும் நகரிலும்

'தென்னிந்தியாவிலிருந்து வரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் எல்லாவற்றையும் தடை செய்ய வேண்டும். தென்னிந்தியப் படங்களைத் தடை செய்ய வேண்டும். தென்னிந்தியர்களைத் தடை செய்யவேண்டும். தென் மொழியைத் தடைசெய்ய வேண்டும்.'

கேட்டுக்கேட்டு அலுத்துப் புளித்துப்போன கோஷங்கள்! மேலும் மேலும் தலைவலி உண்டாக்குகின்றன. 1967ம் ஆண்டு பெப்ரவரி மாதம் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் ஆட்சிபீடத்துக்கு வந்தநாள் முதல் இந்த வீண் பீதி இலங்கையிலுள்ள நமது சிங்களச் சகோதரர்களைப் பிடித்துச் சன்னதம் ஆட்டுகிறது. 'கற்பூரம் கொளுத்த முன்பே ஆவேசம் கொள்பவர்கள்போல' அவர்கள் 'தொயில்'போட்டுத் தாண்டவம் செய்கிறுர்கள்.

தமிழ்நாட்டில் தி. மு. க. ஆட்சிபீடத்தில் அமர்ந்ததால் ஈழத்தில் வாழும் தமிழர்களும் சேர்ந்து கூத்தாடுகிறுர்கள் என்று தவறுதலாக நினைக்கிறுர்கள். தமிழர்கள் இலங்கையில் மட்டுமன்று, பர்மாவிலும், மலேசியாவிலும், தென்னுபிரிக்காவிலும், பீஜீ தீவுகளிலும் மேற்கிந்தியத் தீவுகளிலும் வாழ்கிறுர்கள். இவர்கள் எல்லோரும் தி. மு. க.வின் வெற்றியைக் கண்டு, வீறு கொண்டெழுந்து தாம்தாம் வாழும் இடங்களில் தமிழர் ஆதிக்கத்தை ஏற்படுத்த முயலுகிறுர்களா என்றுல், இல்லவே இல்லை. நமது சிங்கள நண்பர்கள் மட்டும் ஏன் இப்படி அநாவசியமாகக் கிலிகொள்ளுகிறுர்கள் என்பது விளங்கவில்லை.

தி.மு.க. சேனை இலங்கை மீது படையெடுக்கப்போகிறதா? இங்குள்ள தமிழர்கள் விபீஷணன் செய்ததுபோல, தேசத்துரோகம் செய்யப் போகிறுர்களா? சிங்களச் சாதியையே ஒழித்துக்கட்டப்போகிறுர்களா? இது என்ன மதியீனம்!

சிலம்புச் செல்வர் கூறியதுபோலத் தமிழர்கள் உலகில் எங்கு வாழ்ந்தாலும் தமிழர்களே. மொழி, பண்பாடு முதலிய பொதுத் தொடர்புகளால் கட்டுண்டவர்கள். அவர்கள் தமிழ்ப் பத்திரிகைகளையும், சினிமாக்களையும் பார்த்து ரசித்து மகிழ்வது ஒரு சாதாரண மனித உரிமை. இதற்குக் கட்டுப்பாடுகள் [...]

தி. மு. க பூதத்தையும், 'நாம் தமிழர்' பூச்சாண்டியையும் எதிர்த்து போராட வேண்டுமென்று நமது மதிப்புக்குரிய சிங்களத் தலைவர்கள் சிலர் இல்லாத ஒன்றை இருக்கிறதென்று நிரூபித்துச் சிங்கள மக்களிடையே வாக்குத் தவம் பெறுவதற்காகப் பொய்ப் பிரசாரம் செய்துவருகிறுர்கள். அவர்களுடைய உள்ளாதி உள்ளத்தில் தி. மு. க.வினுல் ஒருவித ஆபத்தும் இலங்கைக்கு உண்டாகாதென்று நிச்சயமாக நம்புகிறுர்கள். ஆயினும் சாதாரண பொதுமக்களை, உண்மையான நிலையை அறியாதவர்களை, தட்டி எழுப்பிக் கிளர்ச்சிபண்ணி, நாடாளு மன்றம் போய்ச்சேரவேண்டுமென்ற நோக்கத்துடன், சிங்களவரிடையே தமிழ்த் துவேஷத்தைக் கிளப்ப முற்பட்டிருக்கிறுர்கள். இந்த விதமான பொய்ப்பிரசாரம் எவ்வளவு தூரம் சிங்கள-தமிழ் ஒற்றுமையைக் கெடுத்து, நாட்டின முன்னேற்றத்தைத் தடைசெய்கிறதென்று. சத்தியமான தேசாபிமானிகள் ஆனல் சற்றே சிந்தித்துப் பார்ப்பார்கள்.

தி. மு. க. 'நாம் தமிழர்' பிசாசுகளை விரட்டுவதற்குச் சமீபத்தில் தோன்றியுள்ள ஒரு இயக்கத்தின் பெயர் 'வராயெ வீர சிங்கள சய்விதானய' என்பதாகும். 'வராயெ' என்பது கப்பல் துறைமுகத்தைக் குறிக்கும் சிங்களப் பதம் கொழும்பு, காலி, திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் உள்ள சுமார் 20,900 சிங்களத் துறைமுகத் தொழிலாளிகள் இந்த இயக்கத்தில் சேர்ந்துள்ளார்களாம்.

தி. மு. கழகமோ, 'நாம் தமிழர்' கட்சியோ இலங்கையின்மீது எவ்விதமான தீமையான நோக்கமும் கொண்டிருக்கவில்லையென்றும், இலங்கையிலுள்ள தமிழர் கட்சிகளுக்கும் தங்களுக்கும் எவ்விதமான அரசியல் தொடர்புகளுமில்லை என்றும், தமிழ் நாட்டுத் தலைவர்களும், இலங்கையில் தமிழ்த்தலைவர்களும் உறுதியாக அடித்துக் கூறிவருகிற போதிலும், சிங்கள மக்களை ஏமாற்றும் தலைவர்கள் இவ்விதமான வீண் பயத்தையும் துவேஷத்தையும் கிளப்பிவிட்டுக்கொண்டே இருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

துவேஷப் பிரசாரங்களுக்கு [...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கட்சியினர் வாக்களித்ததும் தமிழ் மக்களின் எதிர்ப்பையும் அதிருப்தியையும் முற்றுமுழுதாக உணர்த்துவதாக இருக்கமாட்டாது

திரு. டட்லி சேனநாயகா தலைமையில் தேசிய அரசாங்கம் அமைவதற்கு தமிழரசுக்கட்சியினர் அச்சமயம் அளித்த உதவியும் ஒத்துழைப்புமே மூலகாரணமென்பது யாவரும் அறிந்ததே, 1965ம் ஆண்டில் தேர்தல் முடிந்ததும் கூட்டணிக்கட்சியினரும் தமிழரசாரின் ஆதரவை நாடினர். ஐக்கிய தேசியக் கட்சியும் நாடியது. தமிழரசார் விதித்த சில நிபந்தனைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் இணங்கியதால்தான் அவர்கள் அரசாங்கத்தில் சேர்ந்து ஒத்துழைப்பு அளித்தனர் என்பதில் உண்மையில்லாமலில்லை. அச்சமயத்திலேயே அரசாங்கத்துடன் சேராமல் எதிர்க்கட்சியிலிருந்து நிபந்தனையுடன் ஒத்துழைப்பு அளித்திருக்கலாம். அல்லது அரசாங்கத்தில் சேர்ந்தபோது, அவர்கள் வழங்க முன்வந்ததாகக் கூறப்படும் மூன்று மந்திரிப்பதவிகளையும் மூன்று உதவி மந்திரிப் பதவிகளையும் ஏற்றிருக்கலாம். இவை வேறு விஷயம். தேசிய அரசாங்கம் கொடுத்த வாக்குறுதி அமைப்பை மாற்றுவதற்குப் பெரும்பான்மையினரின் உதவியும் ஒத்துழைப்பும் அவசியமென்பதை கடந்தகால அனுபவங்கள் உணர்த்தியுள்ளன. எப்படிப் பார்த்தாலும் நான்கு ஆண்டு காலம் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த சில அரசியல் கட்சிகளைக்கொண்ட ஓர் அரசாங்கத்துக்கு அளித்து வந்த ஒத்துழைப்பை இன்னும் சில வருடங்களுக்காவது குறைந்தது அடுத்த பொதுத் தேர்தல்வரையுள்ள ஒருவருட காலத்துக்காவது அளித்திருக்கலாம் என்று கூறுவதற்கு இடமுண்டு. அத்துடன் தேசிய ஐக்கியத்தில் தமிழருக்கும் தமிழரசுக் கட்சிக்குமுள்ள நம்பிக்கையையும் ஆர்வத்தையும் நிலைநாட்ட உதவியிருக்கும் இச்சமயத்தில் உறவைமுறித்துக்கொள்ளும் தீர்மானத்தை மேற்கொண்டது'' ''தேர்தல் சாகஸம்'' என்ற வீண் அபவாதத்துக்கும் இடமளிப்பதாகும் என்றாலும் இனியும் ''தேசிய ஐக்கியத்தைத் தமிழ் அரசுக்கட்சி குலைத்துவிட்டது'' என்ற குற்றச்சாட்டுக்கு இடம் வைக்காமல் தமிழரசார் நடந்துகொள்வது நல்லதும் விவேகமானதுமாகும்.

## படித்தவாலிபர் போட்டி

வல்வெட்டித்துறை, வியா

பருத்தித்துறை நகரசபை தேர்தலிலும் படித்தஇளம் வாலிபர்கள் போட்டியிடத் தீர்மானித்திருக்கிறார்கள். நகரில்பலபுதிய அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவும் இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் தேர்தலில் குதிப்பதெனப்படித்த வாலிபர்கள் முடிவு செய்துள்ளனர்,

இவ்விளைஞர்கள் தமது முடிவைப் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு நடராசாவுக்குத் தெரிவிக்கவிருக்கின்றனர். பருத்தித்துறை நகரசபையின் ஒன்பது வட்டாரங்களிலும் இளைஞர்கள் போட்டியிடவிருக்கின்றனர்.

## புதியதலைவர்

காலி, வியாழன்

காலி வை. எம். த. ஏ யின் தலைவராக இருபத்தி நான்காவது தடவையாக முன்னைய கலாச்சார அமைச்சர் திரு டி. எஸ், குணசேகரா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். திரு. ஹெக்ரா வீரசேகரா மீண்டும் காரியதரிசியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## விருந்துபசாரம்

உடுப்பிட்டி, புதன்

வெநிரி தேவரையாளிஇந்துககல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த விருந்துபசாரம் எதிர்வரும் 16-ம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வண்ண விநாயகர்

அழகான விநாயகரின் வண்ணப் படத்துடன் தமிழ்ப் புதுவருட பஞ்சாங்கம் 12-4-69 'ஈழநாடு' பத்திரிகையுடன் இலவசமாகக் கிடைக்கும். உங்கள் பிரதிகளுக்கு இன்றே உங்கள் பகுதி விற்பனையாளரிடம் ஒழுங்கு செய்து கொள்ளுங்கள்.

சார்பில் ஆட்ரே விலசன் ஜனாதிபதி அபேட்சகராக நியமிக்கப்படுவதற்கு அன்னாரின் வெகுசாதுர்யமான ஓர் திட்டம் சகலரையும் வியப்பில ஆழ்த்தியது: விலசனும் யகத்தான வெற்றியையீட்டினர். இதற்குப் பின்னணியில நின்று உத்வேகம் பாய்ச்சிய முன்னணி வீரரான ரூசவெலடும் பிரமாதமாகப் போற்றப்பட்டார். இக்காலகட்டத்திலே யேரூசவெலட் 'ஜனாதிபதிகளை உருவாக்கும் வித்தகர்' எனப் பாராட்டப்பட்டார். ஆட்ரேவிலசன் அமைத்த அரசாங்கத்தில ரூசவெலட் கடற்படை அமைச்சரானர். சட்டக்கலலூரிக்குப் ''போ' எனத் தந்தை பலவந்தமாக மிண்டி போடுவதற்கு முன் கடற்படை சேவையிலேயே நாலூறியிருந்ததுண்டு. அன்று நிறைவேருத ஆசை விலசன் ஆட்சியில கைகூடியது. அமைச்சராகியும் விட்டார்.

அதிர்ஷ்டத்திலும் செலவாக்கிலும் வாழ்ந்த ரூசவெலடுக்கு அதே அதிர்ஷ்டம் ஒரு பயங்கர திருப்புமுனைக்கும் இட்டுச்சென்றது. ஓர் கோடைகால ஸ்நானத்தை வெகுவாக விரும்பி மிகமிகக் குளிர்வாய்ந்த நீரோடையொன்றில துள்ளிப் பற்பல நீச்சல சாகசத்தில ஈடுபட்ட ரூஸ்வெலட் அன்றே பயங்சர பாரிசவாத நோய்க்கு இலக்கானர். இடுப்பிலிருந்து கீழ் அங்கங்கள் யாவும் ஸ்தம்பித்து மரத்துப்போய்விட்டன. இத்துர்அதிர்ஷ்டம் நடந்தது 40 வயதிற்குள்.

பேரதிர்ச்சியடைந்த ரூசவெல்டி தாயார் தன்னுடன் வைத்துக்கொண்டுஅன்னருக்கு அயராத பராமரிப்புத் தந்தார், ஆனுல் அவரது மனேவலிமை, உறுதி நோயின் பயங்கரப்பிடியிலும் பார்க்க மேலானது. 'விதியின் இச்சதியை எப்படியும் முறியடித்து நான் மீளுவேன்' எனக் கங்கணம் கட்டினர் பிரபலயம் வாய்ந்த வைத்தியர்கள் தந்த விவேகமான சிரத்தையிலும் பார்க்க ரூசவெலடின் தளராத உறுதியும் நம்பிக்கையுமே அவரை வெகுவிரைவில மீட்டதெனக் கூறி கொண்டவர்களுமுளர். ஒரு வருடத்திற்குள் பெருமளவு குணமடைந்து 1924-ம் ஆண்டு நடைபெற்ற ஜனநாயகக்கட்சியின் மாநாட்டில கலந்துகொள்வதற்காக தாங்குகோலில ஊன்றிச் சென்று அங்கு அலபிரட் சிமித் என்பவரை அக்கட்சியின் ஜனதிபதி வேட்பாளராக பிரேரித்து வியத்தகு சொற்பருக்கொன்றாற்றி சகலரையும் வியப்பில ஆழ்த்தினர். அமெரிக்க நாட்டின் இணையிலலாத தலைவர் ஒரு

பட்டனர். வேலையற்றோர் வாழ்வு பெற்றனர். எங்கு பார்த்தாலும் ரூசவெல்ட் தனது நேரடி மேற்பார்வையில் வெகு துரிதமான நிவாரண திட்டங்களில் கவனம் செலுத்தினர். இவரது தெனசி பள்ளத்தாக்குத்திட்டம் மிகப் பிரமாண்டமான சாதனையாகும். அமெரிக்கா புத்தொளிபெற்றது. 1936ம் ஆண்டு இரண்டாம் முறை ஜனதிபதியாகப் போட்டியிட்டபோது இருமாகாணங்களைத்தவிர ஏனைய யாவும் திரண்டெழுந்து ஆதரித்தன அமெரிக்காவை படுகுழிச்சதகலிலிருந்தது மீட்டெடுத்து உறுதியான பாதையின் விறுவிறுப்பான நடைபோட வைத்தவர் ரூசவெல்ட் பிழைகள் ஏற்பட்டுவிடக் கூடுமெனப் பயந்து வாளாவிருப்பவர் அல்ல, இளைத்த பிழைகளைக் கணியாதுபார்த்திருப்பவரும் அல்லர்.

முதலாம் உலகப் போரின் பின்னர் ஐரோப்பிய கெடுபிடிகளில் அமெரிக்கா தலையிடுவதில்லை என்ற ஓர் ஒதுங்கிக் கொள்ளும் கொள்கையை அமெரிக்கா அனுஷ்

## திருமணஅழைப்பு

உடுவில் திரு. கந்தையா தம்பதிகளின் புத்திரி கமலருணிக்கும் எமது புத்திரன் **மகேந்திரனுக்கும்** (றமணிக் கோப்பறேசன், யாழ்ப்பாணம்) சித்திரை மாதம்12ம் திகதி சனிக்கிழமை மு. ப. 8மணிக்கு முருகண்டிப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் மாங்கல்ய வைபவத்திற்கும் பின்னர் மணமகனில்லத்தில் மாலை5மணிக்கு நடைபெறும் வரவேற்புபசாரத்திற்கும் நண்பர்களும் உறவினர்களும் அழைக்கப்படுகின்றனர். செ. நாகலிங்கமும் பாரியாரும். மணமகளின் பெற்ருேர்; வை. கந்தையாவும் பாரியாரும். 932

## மரண அறிவித்தல்

ம. கதிரவேலு

மானிப்பாய்வீதி 41,6-ல் இருந்தம கதிரவேலு காலமாகிவிட்டார் இன்று 11-4-69 காலை 9-30 மணியளவில் வில்லூன்றி மயானத்தில் தகனக்கிரியைசெய்யடபடும். நண்பர்களும் உறவினர்களும் தயவுசெய்து இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேம். 1. க. தங்கராசா, 2. ஸ்ரீமதி கனகரத்தினம்3ஸ்ரீமதி(பேபி) விவேகானந்தன். 930

## சபை தீர்மானங்கள்

அளவெட்டி, வியா.

ஆலய உற்சவங்களை அமைதியாகவும் சிறப்பாகவும் நடத்துவதற்கு அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புச்சபை செய்துள்ள தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளுவதோடு அவ்விதம் விழாக்களை நடத்துமாறு தர்மகர்த்தாக்களை வேண்டிக்கொள்வதெனத் தெரிவிக்கும் தீர்மானம் அகில இலங்கை சைவாலய தர்மகர்த்தாக்கள் சபையின் விசேஷ கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கீரிமலையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு.

அரசாங்கம் முன் ஏற்பாடாக தக்க நடவடிக்கை எடுக்காததேபன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் வன்செயல் நடைபெறக் காரணமாகவிருந்தது ஆகவே அரசாங்கம் முன் ஏற்பாடு நடவடிர்கை எடுக்காததை இச்சபை வன்மையாகக் கண்டிக்கிறது.

சைவசமய பீடாதிபதிகளில் ஒருவராகிய பூரி ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் வெளியிட்ட கருத்தை தமிழகத்தில் சிலர் அவதூறுகப் பேசுவது கண்டு கவலையடைகின்றேம்.

## 'திருமுறைகளை படித்து பயன்பெறவேண்டும்'

சங்கானை, வியாழன்

''ஆலயம் ஒரு புனிதத் தன்மை வாய்ந்தது. நோயைப் போக்க, நாம் வைத்தியனை நாடுவதுபோல் உயிர் நோயைப் போக்க ஆலயங்களை நாடுகிறேம். ஆனல் அமைதியாக வழிபடமுடியாது தவிக்கிறேம். திருமுறையில் நினைத்தால் தான் ஞானத்தை அடைய முடியும். சைவத்தின் மறுமலர்ச்சி காண, வேதத்தோடு சேர்ந்த திருமுறைகளை நாம் ஆலயங்களிலும், வீடுகளிலும், பாடசாலைகளிலும் பேணிக் காப்பதுடன் படித்தும் பயன்பெற வேண்டும்.''

இவ்வாறு முதலியார் செ. சின்னத்தம்பி சங்கானை நிகரை வயிரவர் ஆலய முன்றலில் நடைபெற்ற விஸ்வப்பிரம்ம ஸ்ரீலஸ்ரீ தவத்திரு நாகலிங்க சுவாமிகள் குருபூசை விழாவில் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

விழா ஆரம்பத்தில் தவத்திரு நாசலிங்க சுவாமிகள் வாசிகசாலையிலிருந்து அன்னரின் திருவுருவப்படம் ஊர்வலமாக விழா முன்றலுக்குப் பஜனைக்கோஷ்டியுடன் எடுத்துச்செல்லப்பட்டது.

விசேஷ அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமான விழாவில் முதலியார் சின்னத்தம்பி தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''சைவத்தின் பாரம்பரிய சொத்துக்களில் ஆலயம், அடியார்கள், திருமுறைகள் ஆகியவைகள் அடங்கியுள்ளன. இவைகளை எம்மவர்கள் பேணிக் காக்கவேண்டும். ஆண்டவன் ஒரு பிச்சைக்காரன். அந்நிலையில் தான் தவத்திரு நாகலிங்க சுவாமிகளும் ஒரு பரதேசியாக வாழ்ந்தார் இவருக்கு விழா எடுப்பதில் நாம் பெருமைப்பட வேண்டும் இத்துடன் ஆண்டவன் சந்நிதானத்தில் நாம் எல்லோரும் சமம் என்பதையும் கடைப்பிடிப்பதுடன் சுவாமிகளின் ஞாபகார்த்தமாகப் புலால் புசிப்பதை விட்டுத் திருமுறை ஓதலையும் கைக்கொள்ளுவது அன்னரின் விழவைக் கொண்டாடுவதன் பலனுகும்.''

திரு. இ. அப்பாத்துரை ''மனிதனும் தெய்வமாகலாம்'' என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் சுவாமிகளையே உதாரணமாக விளக்கினர்.

பண்டிதை செ. ஜெகதாம்பிகை, பண்டிதர் இ. நமசிவாயம் உட்படப் பலர் சொற்பொழிவாற்றினர்.

இன்னிசைக் கச்சேரிகளும் இடம்பெற்றன.

......

## நெசவு நிலைய புதிய கட்டட

வேலணை, வெள்ளி

கைத்தறி நெசவு வேலையில் முன்னேற்றம் காணும் பொருட்டு நெசவாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டும் நடாத்தப்படும் நெசவு நிலையத்திற்கான புதிய கட்டிடமொன்று வேலணை கிழக்கில் அமைக்கப்பட்டு வருகிறது.

பத்தாயிரம் ரூபா செலவில் உருவாகும் இக் கட்டிட வேலை பூர்த்தியடையும் நிலையிலுள்ளது.

உலகில் எங்கு வாழ்ந்தாலும் தமிழர்களே. மொழி, பண்பாடு முதலிய பொதுத் தொடர்புகளால் கட்டுண்டவர்கள். அவர்கள் தமிழ்ப் பத்திரிகைகளையும், சினிமாக்களையும் பார்த்து ரசித்து மகிழ்வது ஒரு சாதாரண மனித உரிமை. இதற்குக் கட்டுப்பாடுகள் விதிப்பது முறையாகுமா?

தமிழ்த்தலைவர்களும் உறுதியாக அடித்துக் கூறிவருகிறபோதிலும், சிங்கள மக்களை ஏமாற்றும் தலைவர்கள் இவ்விதமான வீண் பயத்தையும் துவேஷத்தையும் கிளப்பிவிட்டுக்கொண்டே இருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

துவேஷப் பிரசாரங்களுக்கு அரசாங்கமும் ஏன் பாராமுகமாய் இருக்கிறதோ தெரியவில்லை!

## உரும்பராய் மக்கள் சுகாதாரத்துக்கு ஆபத்து?

உரும்பராய், வியாழன்

'கோண்டாவில் பஸ் டிப்போவில் பிரதான வாயிலில் பலாலி - யாழ்ப்பாண வீதியோரத்திலுள்ள கழிவுநீர்த் தேக்கம் மக்களின் சுகாதாரத்துக்குப்பெரிதும் குந்தகம் விளைவிப்பதாகவுள்ளது. பஸ் டிப்போ தொடங்கிய நாளிலிருந்து இந்த நீர்த்தேக்கமும் அப்படியே இருந்துவருகிறது. பலவகையான அழுக்கு நீரும் இந்த நீர்த்தேக்கத்துக்கு வந்து சேர்வதால் நுளம்பு முதலியவற்ருல் தொற்றுநோய் உண்டாகி அயலிலுள்ள மக்களுக்குப் பெருந் தீங்கு விளைவிக்கின்றன. மக்கள் இரவில் நித்திரை செய்ய முடியாத அளவுக்கு நுளம்புகள் பெருந் தொந்தரவுகள் விளைவிக்கின்றன. அத்துடன் துர்நாற்றமும் வீசுகின்றது. குறித்த் பஸ் டிப்போ அழுக்கு நீர்த்தேக்கம் மக்களுக்குப் பொதுவாக உரும்பராய்ப் பகுதியில் வாழும் மக்களுக்குப் பெரும் தீங்கு விளைவிக்கக் கூடியதாயுள்ளது. மக்களின் சுகத்துக்குப் பங்கம் விளைவிக்கும் இந்த அழுக்கு நீர்த்தேக்க விஷயமாக உடனடியாக சுகாதாரப் பகுதி நடவடிக்கை எடுக்கவேண்டும்.'

மேற்கண்டவாறு ஓர் அவசர வேண்டுகோளை உரும்பராய் பட்டினசபை வரியிறுப்போர் சங்கம் இலங்கை போக்குவரததுச்சபை வட பிராந்திய மனேஜருக்கும் யாழ்ப்பாணம் சுகாதார சேவை அத்தியட்சகருக்கும் கோப்பாய் சுகாதாரசேவை அதிகாரிக்கும் அனுப்பி வைத்துள்ளது.

சுகாதாரப் பகுதியினர் இலங்கைப் போக்குவரத்துச்சபையினருடன் தொடர்புகொண்டு உடனடியாக ஆவனசெய்வதாக உரும்பராய் பட்டினசபை வரியிறுப்பாளர் சங்கத்துக்குத் தெரிவித்துள்ளனர்.

குறித்த நீர்த்தேக்கம் இப்படியே தொடர்ந்தும் விடப்படுமாஞல் அழுக்குநீர் நிலத்தில் ஊறுவதன்மூலம் அயலிலுள்ள கிணறுகளின் நீர் பாவிக்க முடியாத நிலையை விரைவில் அடையக்கூடுமோ என்றும் இப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர்.

## செய்திச் சுருக்கம்

### வானெலி லைசென்ஸ் திடீர்சோதனை

ஒவ்வொரு வருடமும் ஜனவரி முதலாம் தேதிக்கு முன்னர் வானெலி பாவனையாளர்கள் தமது வானெலி லைசென்சுகளைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டுமெனக் கேட்கப் பட்டுள்ளார்கள். புதியசட்டத்தின்கீழ் 1969-ம் ஆண்டுக்குரிய வானெலி லைசென்சுகளைப் பெருதவர்கள் தண்டிக்கப்படுவர் இப்பொழுது நாட்டின் பல பாகங்களிலும் லைசென்ஸ் பெருமல் வானெலிகளை உபயோகிப்பவர்களைக் கண்டுபிடிப்பதற்குத் திடீர் சோதனைக்குழுக்கள் இயங்குகின்றன.

0 0 0

### சிறுகைத்தொழில் கண்காட்சி

காலியில்வெலிவிட்ட மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சிறுகைத்தொழில் கண்காட்சியை உள்நாட்டமைச்சர் டாக்டர் தஹநாயக்கா திறந்துவைத்தார்.

அவர் திறந்து வைத்துப் பேசுகையில் உலகிலேயுள்ள சிறுகைத்தொழிலாளர்களில் மிகச்சிறந்தவர்கள் றுகுனேப் பகுதியில் வாழும் சிறுகைத்தொழில் துறையினரேயாவர். சிறுகைத்தொழிலாளர்களைப் பொதுமக்கள் பலவகைகளிலும் ஊககுவிக்க வேண்டும் எனக் கூறினர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம்11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org